பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 22 புதன்கிழமை 08.11.2017 கதிர் 03

## வடக்கு - கிழக்கு நீதிபதிகளுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவ .08

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் பணியாற்றும் 7 மாவட்ட நீதிபதிகளுக்கு வருடாந்த இட மாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி நடை பக்கம் 18

# விக்கி, விமலை ஒன்றாகக் கட்டி நடுக்கடலுக்குள் தள்ளவேண்டும்

## இனவாதிகளை ஒழிக்க இதுதான் ஒரே வழி என்கிறார் நளின் பண்டார



கொழும்பு, நவ. 08

**வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தெற்கில் உள்ள விமல் வீரவன்ஸ போன்ற இனவாதிகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி, நடுக்கடலில் தள்ளிவிடவேண்டும். – இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார.**

புதிய அரசமைப்பை வேண்டாம் என்று கூறிய தெற்குச் சிங்கள மக்கள் இன்று அதனை வரவேற்கிறார்கள் எனவும், இனவாதிகளின் செயற்பாடுகளால்தான் புதிய அரசமைப்பை மக்கள் எதிர்த்தனர் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு கட்சித் தலைமையகமான ஸ்ரீகோத் தாவில் நேற்று நடைபெற்றது. பக்கம் 18

## 12 ஆம் திகதி கூடுகின்றது தமிழரசுவின் மத்திய குழு

யாழ்ப்பாணம், நவ. 08

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி வவுனியாவில் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாகவும் மாகாண எல்லைநிர்ணயம் சம்பந்தமாகச் சமர்ப்பிக்கப்பட்ட பக்கம் 18

## தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கை வவுனியாவுக்கு மாற்றத் தயக்கம் ஏன்?

நாடாளுமன்றில் நேற்று டக்ளஸ் எம்.பி. கேள்வி



கொழும்பு, நவ. 08

காலந்தாழ்த்திச் செய்யப்படும் விடுதலையால் எந்தவித நன்மையும் சம்பந்தப்பட்டவர்களுக்குக் கிட்டாது. மக்களை உணர்ச்சிவசப்படுத்தாமலும், உசுப்பேத்தாமலும், காலந்தாழ்த் பக்கம் 18

# தமிழ் மக்கள் பிளவுபட்டால் உரிமைகள் கிட்டாதுபோகும்

## எச்சரிக்கிறார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்

திருகோணமலை, நவம்பர் 08

**தமிழர்கள் மத்தியில் பிளவுகள் ஏற்படுவதால் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும். - இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் தொடர்ந்தும் இணைந்து செயற்பட முடியாது என்று மற்றுமொரு பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையிலேயே கூட்டமைப்பின் தலைவர் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார். பக்கம் 18



## மாட்டுவண்டிலில் சபைக்கு சென்ற மஹிந்த அணியினர்

எரிபொருள் தட்டுப்பாட்டை எதிர்த்து நேற்று வடமேல் மாகாண சபை உறுப்பினர்கள் அதிரடி



கொழும்பு, நவ. 08

நாடு முழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில் வடமேல் மாகாண சபை அமர்வில் பங்கேற்பதற் காக மஹிந்ததரப்பு உறுப்பினர்கள் சிலர் மாட்டுவண்டிலில் பயணித்த சம்பவம் பக்கம் 18

## கோயில் கேணிக்குள் விழுந்து மாணவன் பரிதாபமாகச் சாவு

மானிப்பாயில் நேற்றுத் துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ 08

மானிப்பாய் வேலக் கைப்பிள்ளையார்கோயில் கேணிக்குள்தவறிவிழுந்து மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மானிப்பாயைச்சேர்ந்த சூரியகுமார் புவனீதன் (வயது – 17) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந் துள்ளார். பக்கம் 18

## அலிக்கான் ஷெரீப் நேற்று பதவியேற்பு



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில், வடக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினராக அலிக்கான் ஷெரீப் நேற்றுப் பதவியேற் பக்கம் 18

## முள்ளிவாய்க்காலில் மிதிவெடிகள் மீட்பு



முல்லைத்தீவு, முள்ளிவாய் கால் கிழக்குப் பகுதியில் 50 மிதிவெடிகள் மீட் பக்கம் 18

## தொடர்ந்து கொட்டுகிறது மழை; குடாநாட்டில் 2,107 பேர் பாதிப்பு

விவசாய நிலங்களும் வெள்ளத்தில்

யாழ்ப்பாணம், நவ. 08

கடந்த ஒரு வார காலமாகக் குடாநாட்டில்தொடர்ந்து கொட்டுகிறது கன மழை.

இடைவிடாது கொட்டும் மழையினால்யாழ்.குடாநாட்டில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

தொடர் மழையால் விவசாய நிலங்கள் வெள்ளத்தில்மூழ்கியுள்ளன. வீதி பக்கம் 18

# வடக்கு, கிழக்கை இணைத்தால் நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடும்!

## மெதகொட அபயதிஸ்ஸ தேரர் எச்சரிக்கிறார்

இனங்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டைத் துண்டுகளாகப் பிரிக்க முற்பட்டால் நாட்டில் மீண்டுமொரு பேரழிவு ஏற்படும் என உத்தேச அரசமைப்பிற்குகடும் எதிர்ப்பை வெளியிட்டுவரும் முக்கிய பௌத்த பிக்குகளில் ஒருவரான ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பௌத்த பீடத்தின் பீடாதிபதியான பேராசிரியர் வண.மெதகொட அபயதிஸ்ஸ தேரர் எச்சரித்துள்ளார்.

அம்பாந்தோட்டை சிப்பிகுளம் பகுதியில் உள்ள முகம்மதியா இஸ்லாமிய அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

நாட்டில் வாழும் அனைத்து இன மற்றும் மதங்களை மதித்து அவர்களுக்கான தனித்துவத்தை அங்கீகரித்து நடந்து கொள்வோமானால் எந்தவொரு பிரச்சினையும் ஏற்படாது.



அதேவேளை, தேரவாத பௌத்தத்தை பின்பற்றும் தான் உட்பட இலங்கையைச் சேர்ந்த பௌத்த பிக்குகளும் சாதி மற்றும் குல ரீதியாகப் பிரிந்து செயற்படுவதாகவும் விமர்சித்த பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் வடக்கு கிழக்கு இணைப்பிற்கும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது நாட்டிற்கான சுதந்திரத்தை சிங்களத் தலைவர் மாத்திரமன்றித் தமிழ்த் தலைவர்கள், முஸ்லீம்கள் மற்றும் கத்தோலிக்கத்தலைவர்கள் அனைவரும் இணைந்து போராடியே வென்று கொடுத்தனர்.

இதன்போது வெள்ளைக்காரன் தனித்தனியே ஆட்சிகளைப் பிரித்துக்கொடுக்க கதைத்த போது சுதந்திரத்திற்காகப் போராடிய எமது தலைவர்கள் அதனை நிராகரித்ததுடன்தங்களிடமிருந்து பறித்த போது நாடு எவ்வாறு இருந்ததோ அதேபோல் ஒரு நாட்டைத் திருப்பிக்கொடுக்குமாறு கேட்டனர்.

ஆனால், ஒருபோதும் நாட்டைத் துண்டாடித் தருமாறு எந்தவொரு தலைவர்களும் வெள்ளையனிடம் கேட்கவில்லை.

அதற்கமையத்தான் ஒரே நாடாகஎமக்குசுதந்திரம்கிடைத்தது. அப்போது அநுராதபுரத்திற்கும் கடல் இருந்தது. இந்தத்தகவல் உங்களுக்குத் தெரியுமோ தெரியாது.

ஆனால், இன்று வடக்கு கிழக்கை இணைத்து நாட்டை பிரிக்கக் கேட்கின்றனர். இதற்கமைய அநுராதபுரம் அரச மரத்தடி வரை அவர்கள் தமிழீழத்தைப் பிரித்துத் தருமாறு கோருகின்றனர்.

நாட்டைப் பல துண்டுகளாகப் பிரித்து ஒருபோதும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடி யாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதனால், இன விகிதாசார அடிப்படையில்நாட்டைத்துண்டாடி, நாட்டில் நல்லிணக்கத்தையோ நிரந்தர அமைதியையோ ஏற்படுத்த முடியாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

அவ்வாறு செய்தால் மனித சடலக் குவியல்களையே நாம் மீண்டும் காண நேரிடும். தற்போது நுவரெலியா - மஸ்கெலியா ஆகிய பிரதேசம் இன விகிதாசார அடிப்படையில் பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக ஸ்ரீபாத புனிதஸ்தலம் அமைந்துள்ள பகுதியும்இனமொன்றை அடிப்படையாகக் கொண்டு தனிப் பிரதேசமாக பிரிக்கப்பட்டுள்ளது. இது மகா தவறு. ஒரு போதும் இந்த நாட்டை இன அடிப்படையில் பிரிக்கக் கூடாது.

அனைத்துஇனங்களும் ஒற்றுமையாக வாழக்கூடிய வகையிலேயே நாட்டை நிர்வகிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மலேசியா செல்லும் மாணவிக்கு உதவி!



வவுனியா, நவ. 08

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளு தூக்கும் போட்டியில் முல்லைத்தீவு பாண்டியன் குள மகா வித்தியாலய மாணவி தே. தர்சிகா 44 கிலோகிராம் பிரிவில் 78 கிலோகிராம் பளு தூக்கி தங்கப் பதக்கம்பெற்று இருந்தார்.

இவர் மலேசியாவில் நடைபெறும் பளு தூக்கும் போட்டியில் பங்குபற்றத் தெரிவான நிலையில் போட்டிக்குச் செல்வதற்கான வறுமை நிலையில் இருந்தமையால் உதவி கோரி இருந்தார்.

இந்த நிலையில், தெல்லிப் பளை மகாஜனா கல்லூரி பழைய மாணவர்கள் விளையாட்டு கழகமாகிய கிறாஸ்கொப்பர் அணியின் ஜி.பி.ல். பிரிவினர் பத்தாயிரம் ரூபாவும், கிறாஸ்கொப்பர் கழக உறுப்பினர் திலகராஜ் ஆசிரியர் ஐயாயிரம் ரூபாவும் சங்கர் ஐயாயிரம் ரூபாவும், மகாஜன கல்லூரி பிரதி அதிபரால் இரண்டாயிரம் ரூபாவுமாக மொத்தம் இருபத்திரண்டு ஆயிரம் ரூபாய் பணம் அந்த மாணவிக்கு வழங்கப்பட்டது.

பாண்டியன் குளம் மாணவிக்கும் மகாஜன கல்லூரிக்கும் கல்லூரி சார்ந்த கழகத்திற்கும் எந்தத் தொடர்பும் அற்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவின் கோரிக்கைக்கு இணங்க வட மாகாணத்தவர் மற்றும் தமிழர் என்ற ரீதியில் மன முவந்து உதவி அளித்தமை யாவருக்கும் முன் உதாரணம் ஆகும். (க-100)

## வவுனியாவில் சைட்டத்திற்கு எதிராக துண்டுப் பிரசுரங்கள்!




வவுனியா, நவ. 08

வவுனியாவில் சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிராகத் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டு காணப்படுகின்றன.

பெற்றோர்களை அழித்து சைட்டத்தை பாதுகாப்பதா?, ரணில் - மைத்திரி தீர்வு உன் கையில்!, என்பதாக பிரசுரங்களில் காணப்படுகின்றன.

இந்தப் பிரசுரத்திற்கு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மருத்துவ பீட மாணவர் செயற்பாட்டுக் குழு உரிமை கோரியுள்ளது.

வவுனியா நகர பகுதிகள், பேருந்து நிலையம், குருமன்காடு போன்ற பல்வேறு பகுதிகளில் இந்தப் பிரசுரங்கள் காணப்படுகின்றன. (க-100)

## வவுனியா மாவட்ட செயலகத்துக்குள் வாகனங்கள் கொண்டு செல்லத் தடை!

### மக்கள் கடும் விசனம்

வவுனியா, நவ. 08

வவுனியா மாவட்ட செயலகத்திற்குள் வாகனங்கள் மற்றும் சைக்கிள்களை கொண்டு செல்வதற்கான தடை தற்போதும் நீடித்து வருவது தொடர்பாக வவுனியா மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மக்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாவட்ட செயலகத்தினுள் பொலிஸார் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருக்கும் நிலையில் காரொன்றில் வந்த நபரொருவர் அங்கு பறந்து கொண்டிருந்த தேசியக் கொடியை இறக்கிவிட்டு சென்றிருந்தார்.

இதனையடுத்து அந்த நபரை பொலிஸார் தேடிக்கைது செய்து விடுவித்திருந்தனர். இதன் பின்னராக மாவட்ட செயலகத்திற்கு சைக்கிள்கள் மற்றும் எவ்வித வாகனங்களையும் பொது மக்கள் உள்ளே கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதனால், வீதியோரங்களில் பாதுகாப்பற்ற முறையில் வாகனங்களை நிறுத்திவிட்டு நடந்து சென்றே வயோதிபர், விசேட தேவைக்குட்பட்டோர் உட்பட அனைவரும் தமது கடமைகளைச் செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந் நிலையில், போதுமான இடவசதிகள் உள்ள வவுனியா மாவட்ட செயலகத்தில் வாகனங்கள் தரிப்பதற்கு இடம் ஒதுக்காத மாவட்ட செயலக அதிகாரிகள், வாகனங்களின் இலத்திரனியல் பண பரிமாற்று இயந்திரங்களைப் பொருத்துவதற்கு இடங்களை வழங்கி வருகின்றனர் எனவும் விசனம் தெரிவித்த மக்கள், பாதுகாப்புக் கடமையில் பொலிஸார், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருக்கும் போது இடம்பெற்ற சம்பவமொன்றுக்காக யுத்த காலத்திலேயே இல்லாத நடைமுறையொன்றைத் தற்போது பின்பற்றுவது தொடர்பிலும் விசனம் தெரிவிக்கின்றனர். (க-100)

# இந்தியத் துணைத் தூதரகமொன்றை மட்டக்களப்பிலும் அமையுங்கள்!

## கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் கோரிக்கை

இந்தியத் துணைத் தூதரகமொன்று மட்டக்களப்பு மாவட்டத்திலும் அமைக்கப்பட வேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் முன்னாள்கிழக்கு முதலமைச்சருமான ஹாபிஸ்நசீர் அஹமட் கூறினார்.

தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்து மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள கொழும்பு நோக்கியே செல்ல வேண்டியுள்ள தாகவும் இதனால்பலசிரமங்களை அவர்கள் எதிர்நோக்க நேரிடுவது தொடர்பில் மக்கள் தம்மிடம் பல தடவைகள் முறை யிட்டுள்ளனர் எனவும் முன்னாள் முதலமைச்சர் நசீர் அஹமட் கூறினார்.

நேற்று ஏறாவூரில் பொது மக்கள் அமைப்பினர் சிலர் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரை நேரில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைக் கூறினார்,

கிழக்கின் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழுகின்றனர்.

இவர்கள் வீசா மற்றும் ஏனைய தேவைகளுக்கு இந்தியத் தூதரகத்தை நாட வேண்டுமானால் அவர்கள் கொழும்புக்கே செல்ல வேண்டியுள்ளது, தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் மலையகத்தின் கண்டியிலும் வடக்கின் யாழ்ப்பாணத்திலும் இந்தியத் துணைத் தூதரகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறாயின் கிழக்கில் இந்தியத்துணைத்தூதரகமொன்றை ஆரம்பிக்காமல் இருப்பதில் எவ்வித நியாயத் தன்மையும் இல்லை. - என்றார் அவர்.

# எரிபொருள் விற்பனை சட்டவிரோத முறையில்!

வென்னப்புவ பகுதியில் சட்ட விரோதமான முறையில் எரிபொருள் விற்பனை செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வென்னப்புவ டிப்போ சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்திலிருந்து, 100 மீற்றர் தொலைவில் குறித்த நபர் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்ட போதே நேற்று முற்பகல் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இந்த எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் விநியோகம் இடம்பெறாத நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சட்டவிரோதமான முறையில் கூடிய விலையில் எரிபொருளை விற்பனை செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முச்சக்கரவண்டி பழுதுபார்க்கும் நிலையத்தின் உரிமையாளர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்வதற்கு வைத்திருந்த ஒரு தொகை பெற்றோலையும் பொலிஸார் கைப் பற்றியுள்ளனர்.

அவ்வேளை குறித்த இடத்திற்கு பெருமளவானவர்கள் எரிபொருளை கொள்வனவு செய்ய வந்திருந்தனர் எனவும் பொலிஸார் தெரிவித்தானர். (உ)

# பிரதமர் ரணில் இந்தியா செல்வார்



இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இம்மாதம் மூன்றாவது வாரத்தில் புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்வார் என்று என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைப் பிரதமருடன், அமைச்சர்கள் மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரம ஆகியோர் உள்ளடங்கிய உயர்மட்டக் குழுவொன்றும் புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இந்தப் பயணத்தின் போது, எட்கா உடன்பாடு, மத்தள விமான நிலையத்தைக் கூட்டாக அபிவிருத்தி செய்யும் திட்டம் உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் குறித்து, இந்திய அரசின் உயர்மட்டத் தலைவர்களுடன் இலங்கைப் பிரதமர் பேச்சு நடத்தவுள்ளார்.

# பெற்றோலைப் பகிரமுடியாதோர் அதிகாரங்களை எப்படிப் பகிர்வர்?

## இப்படிக் கேள்வி எழுப்புகின்றார் மஹிந்தர்



கொழும்பு, நவ.8

பெற்றோல் பிரச்சினைக்கே தீர்வை வழங்கத் திண்டாடும் இந்த அரசு, பெடரல் (கூட்டாட்சி) விவகாரத்தை எப்படிக் கையாளப் போகின்றதோ எனத் தெரியவில்லை என்று கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இந்த அரசிடம் நிர்வாகத்திறனோ அல்லது முகாமைத் துவ திறனோதுளியளவேனும் இல்லை. எந்த விடயத்தில் கைவைத்தாலும் பிரச்சினை தலை விரித்தாடுகின்றது. அவற்றைத் தீர்ப்பதற்குரிய நடைமுறையும் அரசுக்குத் தெரியவில்லை.

பெற்றோல் பிரச்சினையையே தீர்க்க முடியாதவர்கள், இந்தப் பெடரல் பிரச்சினையை எப்படிக் கையாள்வார்கள்? பெற்றோலையே முறையாக பகிரமுடியாத இவர்கள், அதிகாரங்களைப் பகிர்ந்த பின்னர் அதை எப்படி முகாமை செய்வார்கள்? ஒன்றுமே புரியவில்லை. ஆட்சி மாற்றமே இவற்றுக்கெல்லாம் தீர்வாக அமையும் - என்றார்.

# புளொட் மத்திய குழு இன்று வவுனியாவில் கூடுகின்றது

யாழ்ப்பாணம், நவ.8

தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் குறித்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு இன்று காலை முதல் மாலை வரை வவுனியாவில் கூடி ஆராயவிருக்கின்றது.

★ புதிய அரசமைப்புத்தயாரிப்புக்கான இடைக்கால அறிக்கை மற்றும் ஆறு உப குழுக்களின் அறிக்கை ஆகியன குறித்தும் -

★ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், அரசியல் பிணக்குகள் போன்றவை குறித்தும் -

★ எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் கட்சி பின்பற்ற வேண்டிய தந்திரோபாயங்கள் குறித்தும் -

இன்றைய மத்திய குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

# கலை, விஞ்ஞான, முகாமைத்துவ பீடங்கள் 13 ஆம் திகதி தொடக்கம் இயங்கும்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கலை, விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவ பீடங்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி மீண்டும் கல்வி நடவடிக்கைக்காக திறக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

அதன்படி அந்தப் பீடங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி காலை முதல் தமது விடுதிகளுக்கு திரும்புமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர்.

அதேவேளை கடந்த 30 மற்றும் 31ஆம் திகதிகளில் நடைபெற இருந்த விஞ்ஞானபீடப் பரீட்சைகள் எதிர்வரும் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக பதிவாளரினால் ஒட்டப்பட்டுள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் தோன்றியிருந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கலை, விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவ பீடங்கள் கடந்த 31ஆம் திகதி முதல் மூடப் பட்டிருந்தன.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்டுள்ள கைதிகளின் வழக்குகளை வவுனியா நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு கோரியும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் தொடர் போராட்டம் நடத்தப்பட்டு வந்ததையடுத்து பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் இடை நிறுத்தப்படுகின்றன என அறிவிக்கப்பட்டது.

# வடக்கிலும் ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்துதல் அவசியம்

## சபையில் வலியுறுத்தினார் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா



யாழ்ப்பாணம், நவ.8

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் ஓட்டோச் சாரதிகள் மக்களிடம் தாங்கள் விரும்பிய வாறு பணத்தை அறிவிடுகிறார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா சுட்டிக்காட்டியுள்ளார்.

உடனடியாக வடக்கில் பயணிகள் சேவையில் ஈடுபடுத்தப்படும் ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் கோரினார். வடக்கு மாகாண சபையின் 109ஆவது அமர்வுநேற்றுப்பேரவைச்செயலகத்தில்நடைபெற்றது.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா சபைக்கு விசேட கவனவீர்ப்பாக மேற்படி விடயத்தைக் கொண்டு வந்து உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் ஓட்டோச் சாரதிகள் மக்களிடம் தாங்கள் விரும்பிய வாறு ஒருவருக்கொருவர் மாறுபட்ட விதத்தில் பணத்தைப் பெறுகிறார்கள். எனவே ஒழுங்கான கட்டணம் நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

கொழும்பில் உள்ளதைபோல் சகல ஓட்டோக்களுக்கும் மீற்றர் பொருத்தப்படவேண்டும். ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தவும் கட்டணத்தை நிர்ணயம் செய்யவும் யாழ். மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்திருந்த நிலையில், மாகாண போக்குவரத்து அமைச்சு அதில் தலையிட்டு தமது விடயம் என சுட்டிக்காட்டியிருந்ததால் மாவட்ட செயலகம் அதனை நிறுத்தியிருந்தது.

எனவே மாவட்ட செயலகத்துடன் தொடர்பு கொண்டு ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

# விஞ்ஞான கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை திறந்த பல் கலைக்கழகத்தின் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தினால் விஞ்ஞானமாணி பட்டக் (BSc) கற்கைநெறி 2017/2018 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் க.பொ.த. உயர்தரத்தில் கணித அல்லது விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான அத்திவாரப் பாட நெறிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக விண்ணப்பிக்க முடிவதுடன், மேலதிக விவரங்களை யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியுமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

## 'போதையற்ற நாடு'

# கிளிநொச்சியில் இன்று நடைபவனியும் கலந்துரையாடலும்

போதைப் பொருள் தடுப்பு சம்பந்தமான கலந்துரையாடல் வேலைத்திட்டம் இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் 'போதையற்ற நாடு' எனும் தொனிப்பொருளில் தேசிய வேலைத் திட்டத்துடன் இணைந்ததான வடமாகாண போதைப் பொருள் தடுப்பு சமூக மேம்பாட்டு வேலைத்திட்டத்தை கிளிநொச்சியில் நடத்தவுள்ளது.

இதன்பொருட்டு பிற்பகல் ஒரு மணிக்கு கரடிப்போக்கு சந்தியில் போதைப் பொருள் தடுப்பு சமூக மேம்பாட்டு நடை பவனி ஆரம்பமாகி மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தை வந்தடையவுள்ளது. அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் வேலைத்திட்டம் இடம்பெறும். (இ)

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# ஐக்கியம் பேணும் முறைமை

"தமிழர்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்துவதால் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும்." - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கும் இடையிலான முறுகல் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள சூழலிலேயே 'ஐக்கியம் முக்கியம்' என்ற தமது பழைய பல்லவியை - துரும்பை - தூக்கி அடித்திருக்கின்றார் சம்பந்தர்.

திருகோணமலையில் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய சம்பந்தன், "தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்க வேண்டுமானால் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையுடன், ஒருமித்து செயற்பட வேண்டியமை அவசியமாகும். இதை அனைவரும் உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும். கூட்டமைப்பில் பிளவை ஏற்படுத்தி, அதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியாத நிலைமை உண்டுபண்ண சிலர் விரும்புகின்றனர். இது ஏற்புடையதல்ல. நாம் ஒற்றுமையுடன் பயணித்தால் மட்டுமே எமது உரிமைகளை இலகுவாக அடையமுடியும்." - என்று கூறியிருக்கின்றார்.

தந்தை செல்வா, தளபதி அமிர்தலிங்கம், தேசியத் தலைவர் பிரபாகரன், ஐயா சம்பந்தன் என எல்லோருடைய காலத்திலும் உரைக்கப்படுகின்ற விடயம்தான் இந்த 'ஒற்றுமை அவசியம்' - 'ஐக்கியம் முக்கியம்' - என்ற கோஷம். இது இப்போது எழுந்துள்ள புதிய விடயமல்ல.

மிதவாதக் கட்சிகள் பலவும் தேர்தலுக்குத் தேர்தல் வாக்குகளைச் சுருட்ட கையில் எடுக்கும் ஆயுதம் இதுதான்.

ஒற்றுமை முக்கியம் என்று சொல்லும் தலைவர்கள், அந்த ஐக்கியத்தை நிலைநிறுத்த எத்தகைய நடவடிக்கைகளை எடுத்தார்கள் - என்ன அணுகுமுறையைப் பின்பற்றினார்கள் - என்பவை விலாவாரியாக நோக்கப்பட வேண்டியவை.

இப்போது கூட்டமைப்பில் ஐக்கியத்துக்கு ஆப்பாக வந்திருப்பது ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியாகும்.

சரியோ, தவறோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கிய கட்சிகளுள் ஒன்றாகவும், உருவாக்கிய தலைவர்களுள் ஒருவராகவும் விளங்கும் தரப்பு ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் அதன் தலைவரான சுரேஷ் பிறேமச்சந்திரனும்தான். அதை மறுப்பதற்கில்லை.

தமிழ்க் கூட்டமைப்பை உருவாக்கிய கட்சிகள் நான்கு. தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ.

இந்த நான்கில் முதல் மூன்றும் இன்று கூட்டமைப்பில் இல்லை என்றளவுக்கு நிலைமை வந்துவிட்டது. எஞ்சியிருக்கும் ரெலோ மட்டும்தான் இன்று கூட்டமைப்பின் ஸ்தாபகக் கட்சிகளுள் ஒன்று.

பிரதான ஸ்தாபகக் கட்சிகளுள் மூன்றை வெளியே விட்டுவிட்டுத்தான் நாம் இப்போதும் 'ஐக்கியம் முக்கியம்' என்று இன்னும் பேசிக் கொண்டு இருக்கின்றோம்.

'ஐக்கியம் முக்கியம்' என்று கூறித்தான் 2013 இல் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை எதிர்கொண்டோம். மக்கள் பெருவாரியாக வாக்களித்து 'ஐக்கியம் முக்கியம்' என்பதை உறுதிப்படுத்தினார்கள். ஆனால், அதன் பின்னர் நடந்தவை என்ன? ஒற்றுமையைக் காட்டி வாக்குகளைச் சுருட்டியவர்கள் பின்னர் எப்படி நடந்து கொண்டார்கள்? சந்தி சிரிக்கும் நிலைமைதான் நடந்தேறியது.

'ஐக்கியம் முக்கியம்' என்ற கோஷத்தை வைத்துக் கொண்டுதானே வேட்பாளர் தெரிவில் இருந்து விருப்பு வாக்குகள் 'சீரமைப்பு' வரை நம் தலைவர்கள் 'திருகுதாளம்' பண்ணினார்கள்? தத்தமது எதேச்சாதிகார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு மட்டும் 'ஐக்கியம் முக்கியம்' என்ற கோஷத்தை முன்வைப்பதில் அர்த்தமில்லை. அந்தக் கோஷம் நீண்ட காலத்துக்குச் செல்லாது.

தமிழர்கள் ஒன்றுபட்டு நின்றால்தான் நியாயமான தீர்வு கிட்டும் என்பது சரியானதுதான். நிச்சயம் கடைப்பிடிக்கப்பட வேண்டிய கட்டாய விவகாரம் அது.

ஆனால், அந்த ஐக்கியத்தை நிலைநாட்டிப் பேணுவதற்கு நமது தலைவர்கள் எப்படி சிரத்தை எடுத்துக் கொண்டார்கள், எவ்வாறு நியாயமாக நடந்து கொண்டார்கள், என்னென்ன செய்தார்கள் என்பவையும் சிந்திக்கப்பட வேண்டியவையே.

நோய்க்கு மருந்து செய்வதைவிட நோய் மூலத்துக்கு மருந்த செய்வது - வைத்தியம் பார்ப்பதே - அவசியமானதாகும்.

இப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். விடயத்தில் கூட அக்கட்சி கூட்டமைப்பை விட்டு வெளியேறுவதாகக் கூறவில்லை. கூட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எதேச்சாதிகாரம் எல்லை மீறிவிட்டது, அந்தக் கட்சியின் சின்னத்தில் தேர்தலில் இனிப் போட்டியிட முடியாது என்றுதான் கூறுகின்றது.

அவரது கூற்றில் - குற்றச்சாட்டில் - ஏதோ ஆழமான விடயம் பொதிந்திருப்பது போலவே படுகின்றது.

ஐக்கியம் பற்றி எடுத்துரைக்கும் - வலியுறுத்தும் - சம்பந்தன் ஐயா, கூட்டமைப்பின் தலைவர் என்ற முறையில் அதன் பிரதான பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எவ்வினதும், அதன் தலைவரும் கூட்டமைப்பின் ஸ்தாபகர்களுள் ஒருவருமான சுரேஷ் பிறேமச்சந்திரனினதும் கூற்றுக்களிலும் - குற்றச்சாட்டுக்களிலும் - உள்ள விடயங்களை உரிய முறையில் பரிசீலித்து, சரியாகக் கையாண்ட பின்னர், ஐக்கியம் பற்றி வலியுறுத்துவதே நியாயமாக இருக்கும் என நாம் நம்புகின்றோம்.

எதேச்சாதிகாரப் போக்குப் பற்றிய குற்றச்சாட்டுக்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்காமல் விட்டேத்தியாக நடந்து கொண்டு, பிறகு ஐக்கியம் முக்கியம் என்பது கூறுவதில் அர்த்தமில்லை.

'ஐக்கியம் முக்கியம்' என்று வலியுறுத்தும் போது, ஐக்கியத்தைப் பேணுவதற்கான சூழலை உறுதிப்படுத்துவதும் அதை வலியுறுத்தும் தரப்புக்குப் பொறுப்பாகிவிடும் என்பதைச் சம்பந்தனும் ஏனைய தலைவர்களும் மறந்துவிடக்கூடாது.

# உத்தேச புதிய அரசமைப்புக்கு எதிரான போராட்டம் மஹிந்த தலைமையில் அ'புரவில் 12இல் ஆரம்பம்

கொழும்பு, நவ. 08

புதிய அரசமைப்புக்கு எதிரான போராட்டம் மஹிந்த தலைமையில் அநுராதபுரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

உத்தேச அரசமைப்புக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னெடுக்கும் போராட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி அநுராதபுரத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி அனுராதபுரம் சல்காது மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு, புதிய அரசமைப்பு தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட கூட்டம் நடைபெற வுள்ளது என கூட்டு எதிர்க்கட் சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பிற்கு எதிரான அனைத்துச் சக்திகளும் இந்தக் கூட்டத்தில் இணைத்து கொள்ளவுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் 54 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்க உள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூட்டு எதிர்க் கட்சியின் கட்சித் தலைவர்கள் கூட்டமொன்று நேற்று மாலை 6 மணிக்கு கொழும்பு விஜேராமவில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடப் படவுள்ளது.

(க)

# வடிகாலமைப்புச் சபைக்கான புதிய கட்டடத்துக்கு அடிக்கல்!



இரத்மலானை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உத்தேச பயிற்சி நிலையத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது.

280 பேர்ச்சஸ் நிலப்பரப்பில் 9800 சதுர மீற்றரில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த மூன்றுமாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியும், இலங்கை அரசும் இதற்காக 121 கோடி 80 லட்சம் ரூபா நிதி வழங்குவதற்கு முன்வந்துள்ளன.

மேலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைமை அலுவலகத்தின் புதிய பிரதான கட்டடத்தை அமைச்சர் ரவூப் ஹக்கீம் திறந்துவைத்தார்.

இந்தக் கட்டடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய கேட்போர் கூடம், குடிதண்ணீர், பாவனையாளர்களின் நன்மைகருதி நவீன மயப்படுத்தப்பட்ட கட்டணம் செலுத்தும் நிலையம் என்பன உள்ளடங்குகின்றன.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, அமைச்சின் செயலாளர் சரத் சந்திரசிறி விதான, மேலதிகச் செயலாளர் ஏ.சீ.எம்.நபீல், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் கே.ஏ.அன்சார், உப தலைவர் ஷபீக் ரஜாப்தீன் உள்ளிட்ட உயரதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் எனப் பலர் பங்கு பற்றினர்.

# மாவனெல்லவில் வாய்க்காலில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு



கொழும்பு - கண்டி பிரதான வீதியில் சடலம் ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

மாவனெல்ல இலங்கை போக்குவரத்துச் சபைக்கு அருகிலுள்ள வாய்க்கால் ஒன்றில் இருந்து சடலம் மீட்கப்பட்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சடலத்தின் கால்கள் மாத்திரம் வெளியில் தெரிந்துள்ள நிலையில், அந்தப் பகுதியில் சென்ற பலர் அச்சமடைந்துள்ளனர்.

இந்த நபர் வாய்க்காலிற்குள் விழுந்து உயிரிழந்துள்ளாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா என பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்றுக் கிடைத்துள்ள தகவல்களுக்கமைய இந்த நபர் மாவனெல்ல பிரதேசத்தை சேர்ந்தவர் எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் மாவனெல்ல வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பரிசளிப்பு விழா

கரணவாய், நவ. 08

கரணவாய் தாமோதரம் வித்தியாலய நிறுவுநர் நினைவும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ஆனந்தராஜா விமலராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) திருமதி அபிராமி பார்த்தீபன் கலந்து கொள்வார். (இ)

## நாளை

09.11.2017
வியாழக்கிழமை

நட்சத்திரம் : புனர்பூசம் மு.இ. 7.34 வரை
திதி : ஷஷ்டி மு.இ. 10.34 வரை

சுபநேரம் : 7.35 – 9.05 வரை
இராகுகாலம்: 1.35 – 3.05 வரை

# மலேரியா நுளம்புகளை ஒழிப்பதற்கு சுகாதார அமைச்சு தீவிர நடவடிக்கை

கொழும்பு, நவ. 08

டெங்கு நுளம்பை போன்று மலேரியா நுளம்புகளும் வட மாகாணத்தில் பல இடங்களில் காணப்படுகின்றன என யாழ். மாவட்ட சுகாதார அமைச்சு தொற்றுநோய் தடுப்புப் பிரிவு டாக்டர் ஜி.ரஜீவ் தெரிவித்துள்ளார்.


இந்த மலேரியா நுளம்பு முதன்முறையாக மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்டதுஎனவும். பின்னர் இது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா உள்ளிட்ட வடமாகாண பிரதேசங்களில் காணப்படுகின்றன என்றும் இதனை இல்லாது ஒழிப்பதற்கு தீவிர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மலேரியாநுளம்புகள்காணப்படும் கிணறுகளில் அவற்றை இல்லாதொழிப்பதற்காக மீன் குஞ்சுகள் மற்றும் அவேற் என்னும் திரவம் கலக்கப்படுகின்றன. மலேரியா நோய் தொடர்பில் இதுவரை எவரும் பாதிக்கப்படவில்லை.

மீண்டும் இரண்டு நாள் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் எதிர்வரும் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்படவுள்ளன.

வடபகுதியில் தற்பொழுது பருவமழை பெய்ய ஆரம்பித்துள்ளதனால் நுளம்புகளின்




பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த விசேட வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த இரண்டு நாள்கள் வேலைத்திட்டத்தின்கீழ்பொது மக்கள் மத்தியில் டெங்கு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு இந்த முறையும் வாகனத்தில் ஒலி பெருக்கியை பயன்படுத்தி அறிவுறுத்தல்கள்வழங்கப்படவுள்ளதுடன், புகை விசிறப்படவுமுள்ளன.

மேலும், ஒவ்வொரு சனிக்கிழமையும் டெங்கு நுளம்பு பரிசோதனைகள் தொடந்தும் வடமாகாணத்தில் நடைபெற்று வருகின்றன.

கடந்த மாதம் இடம்பெற்ற டெங்கு தடுப்பு நடவடிக்கையில், யாழ்ப்பாணத்தில் 790 இடங்களில் சோதனை நடத்தப்பட்டன. இதில் 259 இடங்கள் டெங்கு அனர்த்தத்தை கொண்ட இடங்களாக அடையாளம் காணப்பட்டன.

டெங்குநுளம்பு பரவக்கூடிய வகையில் இருப்பிடங்களை வைத்திருந்த 104 பேருக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப் பட்டுள்ளது என்றும் டாக்டர் ஜி. ரஜீவ் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையின் போது தெல்லிப்பழைப் பிரதேசத்தில் அதிகளவில் டெங்கு குடம்பிகள் பரவுவதற்கான சுற்றாடல் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)



# இந்திய கப்பல்கள் நாடு திரும்பின!

கொழும்பு, நவ.08

இந்தியாவின் கரையோர பாதுகாப்பு கப்பல்களான ரிர் மற்றும் சுஜாதா ஆகிய இரு கப்பல்கள் இலங்கைக்கான நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு இந்தியாவிற்குச் சென்றுள்ளன.

இலங்கைக் கடற்படை சம்பிரதாயபூர்வமாக இந்த கப்பல்களை வழியனுப்பி வைப்பதற்கான நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

ஐந்து நாள்களாக இங்கிருந்த இந்தக் கப்பல்களில் பல்வேறு பயிற்சி நடவடிக்கையில் இலங்கைக் கடற்படையினர் கலந்துகொண்டனர்.

தொழில்சார் வல்லுநர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் இரு நாடுகளுக்கிடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்திய கடற்படையினர் சமூகத்திட்டங்களிலும் இதன் போது பங்கு கொண்டனர்.

# இந்திய மீனவர்கள் நான்கு பேர் கைது

கொழும்பு, நவ. 08

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 4 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

நேற்று அதிகாலை குறித்த 4 இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்டனர் என கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்திய மீனவர்களிடமிருந்து மீன்பிடி உபகரணங்கள் சிலவும் மற்றும் அவர்கள் பயணித்த படகும் கடற்படையால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நெடுந்தீவு கடற்பரப்பில்மீன்பிடித்துக்கொண்டிருந்த கோட்டைப் பட்டினத்தைச் சேர்ந்த 4 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (க)

# கடற்படைக்கு போர்க் கப்பலை வழங்குகின்றது அமெரிக்கா

கொழும்பு, நவ. 08

அமெரிக்க கடலோரக்காவல் படையின் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட போர்க் கப்பல் ஒன்றை இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்கா வழங்கவுள்ளது.

இலங்கைக்கு நேற்றுமுன்தினம் பயணம் மேற்கொண்ட, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் தோமஸ் சானொன், வெளிவிவகாரச் செயலர் பிரசாத் காரியவசத்துடன் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே இதுபற்றிக் கூறப்பட்டுள்ளது.

வலுவான இருதரப்பு உறவுகளின் அடையாளமாகவும், இலங்கையின் அமெரிக்காவின் ஈடுபாடுகளின் ஆழத்தை வெளிப்படுத்தும்வகையிலும், அமெரிக்க கடலோரக் காவல்படையின் கப்பல் ஒன்றை இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்கா வழங்க




வுள்ளது.

காங்கிரஸ் அனுமதி கிடைத்ததும் இது வழங்கப்படும். செக்ரெட்டரி வகையைச்சேர்ந்த உயர் திறன் கப்பல், இலங்கை அதன் கடலோரக் பகுதியையும், சிறப்பு பொருளாதார வலயத்தையும், கடல் பாதை மற்றும் தொலைத் தொடர்பு வழியைப் பாதுகாக்கவும் இலங்கைக்கு உதவும் என்றும் அந்த கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே, இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்க கடலோரக் காவல் படை, கரேஜஸ் என்ற போர்க்கப்பலை வழங்கியிருந்தது. அது தற் போது இலங்கைக் கடற்படையால் சமுத்ர என்ற பெயரில் இயக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் உதவிச் செயலர் ரணில், மாரப்பனவுடன் பேச்சு



கொழும்பு, நவ. 08

இலங்கைக்கு இரண்டு நாள்கள் விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச்செயலர்தோமஸ்சானொன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு வந்த, அமெரிக்காவின் உதவிச் செயலர் தோமஸ் சானொன், அலரி மாளிகையில் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசினார்.

இதன்போது, சுதந்திரமான, திறந்த இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது என இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் கீச்சகப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுக்களில் அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப்பும் பங்கேற்றிருந்தார். (க)

காலைக்கதிர் Kalaikkathir



# மட்டு. நகரில் சுனாமி ஒத்திகை நிகழ்வுகள்



சுமத்திரா தீவுக் கடலில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய நாடளாவிய ரீதியில் கரையோரப் பிரதேசங்களுக்கு இந்தச் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு கரையோர மக்களின் பாதுகாப்புப் தொடர்பான முன் ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கை சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகை நிகழ்வாக நாடளாவிய ரீதியில் கரையோர பிரதேச செயலகப் பிரிவுகளில் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவத் திணைக்களம் , உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு ஆகியன இணைந்து இந்த நடவடிக்கையை கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு பிரதேசத்தில் மேற்கொண்டது.

இந்த முன்னெச்சரிக்கை ஒத்திகை நடவடிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் ஏழு முன்னெச்சரிக்கைக் கோபுரங்களும் ஒரே தடவையில் பரீட்சிக்கப்பட்டு அப்பிரதேசங்களிலுள்ள மக்களையும் அனர்த்தத்துக்குத் தயார்படுத்தும் நோக்குடன் இடம்பெற்றது.

முன்னெச்சரிக்கைக் கோபுரங்கள் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கோட்டைக் கல்லாறு, மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புதுக்குடியிருப்பு, காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காத்தான்குடி, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கல்லடி, ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள களுவன்கேணி, கோரளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கல்குடா, கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ளவாகரை( ஊரியன்கட்டு) ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த முன்னெச்சரிக்கைக் கோபுரங்களில் ஒலி எழுப்பபட்டு இந்த ஒத்திகை நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முகமட் றியாஸ் மற்றும் உதவி மாவட்ட செயலாளர் எ.நவேஸ்வரன் தலைமையிலான உத்தியோகத்தர்கள், பொலிஸ் திணைக்கள அதிகாரிகள், முப்படையினர், அரச திணைக்கள அதிகாரிகள் ,அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், பொதுமக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ப)

# திருகோணமலையில் நிலத்தடி மாளிகை!

திருகோணமலையில் நிலத்தடி மாளிகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

திருகோணமலை de redout போர்க்கள பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு ஆராய்ச்சியின் போது நிலத்தடி அறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது என அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சர் அகிலவிராஜ்காரியவசத்தின் ஆலோசனைக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டத்தின் போது இந்த நிலத்தடி அறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலத்தடி அறையின் விசேட பகுதி ஒன்றுக்கு கொங்கிறீட் கலவை பயன்படுத்தப்பட்டு நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மண்ணின் ஊடாக அதற்குள் நுழைவதற்கான கதவு ஒன்று வைத்து மூடப்பட்டுள்ளது என உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கதவு கருங்கற்களால் கட்டி மூடப்பட்டுள்ள நிலையில், தோன்றியுள்ள நிலத்தடி அறையுடன் ஆங்கிலக் காலக்கட்டத்தில் கட்டப்பட்ட பீரங்கித் தாங்கி ஒன்றும் காணப்பட்டுள்ளது.

ஆங்கிலேயர்களால் கொங்கிறீட் கல், மணல் ஆகியவைகள் பயன்படுத்தி ஆரம்ப மாற்றங்கள் மேற்கொண்டு நிர்மாணிப்பு நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளன.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது அந்தப் பகுதிகளில் மணல் மற்றும் பெற்றோலால் நிரப்பப்பட்டு மூடப்பட்டுள்ளது.அத்துடன் ஓரளவு நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருந்தன எனவும், நிர்மாணிப்புகள் சிமெந்து பயன்பாட்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளது எனவும் உறுதி செய்யப்பட்டுள்ளது எனக்கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)



# பயிற்சியை நிறைவுசெய்த கைதிகளுக்கு தேசிய தொழில் தகைமை சான்றிதழ்கள்



மட்டக்களப்பு சிறைச்சாலையில் பயிற்சிகளை நிறைவுசெய்த கைதிகளுக்கு தேசிய தொழில் தகைமை மூன்றாம் தரச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு பிரதம ஜெயிலர்என்.பிரபாகரன்ஒழுங்கமைப்பில் சிறைச்சாலை அத்தியட்சகர் கே .எம் .யு. எச் . அக்பர் தலைமையில் நடைபெற்றது.

இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையால் மட்டக்களப்புச் சிறைச்சாலைக் கைதிகளுக்கு ஆறுமாத மேசன் தொழில் பயிற்சி வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சியை நிறைவுசெய்த 13 கைதிகளுக்கு தேசிய தொழில் தகைமை மூன்றாம் தர சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு மட் டக்களப்பு சிறைச்சாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின்உதவிப்பணிப்பாளர்கலந்துகொண்டு இந்தச் சான்றிதழ்களை வழங்கினார்.

# மட்டு. மாவட்டத்தில் 80 மி.மீற்றர் மழை

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வருடத்தில் நேற்றுக் காலை 8.30 மணி வரையில் ஆயிரத்து 203 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என மட்டக்களப்பு மாவட்ட வானிலை அவதான நிலையத்தின் கடமைநேர அதிகாரி எ.ரமேஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் காலை 8.30 மணியிலிருந்து நேற்றுக் காலை 8.30 மணி வரையிலான 24 மணித்தியாலதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 80 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்ட கால வறட்சிக்குப் பின்னர் தற்போது மாலை மற்றும்



இரவு வேளைகளிலும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாற்சோறு வழங்கி கருணாவின் பிறந்தநாள் கொண்டாட்டம்

முன்னாள் பிரதி அமைச்சரும், தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவருமான கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனின் 51ஆவது பிறந்த தினத்தை மட்டக்களப்பு இளைஞர்கள் நேற்றுக் கொண்டாடினார்கள்

இதை முன்னிட்டு தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி கட்சி யின் ஆதரவாளர்களால் நேற்று பாற்சோறு வழங்கும் நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிகழ்வு கிரான் பிள்ளையார் கோவில் முன்பாக இடம் பெற்றது.

இதில், கட்சி உறுப்பினர்கள் எஸ்.உதயகுமார், துரைசிங்கம், மித்திரன், கண்ணன் உட்பட கட்சி ஆதரவாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது பாதசாரிகள், பொதுமக்கள் எனப் பலருக்கும் பாற்சோறு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப)



காலைக்கதிர்
Kalaikkathir



# மன்னாகண்டல் குளம் உடைந்தது!

முல்லைத்தீவு, நவ. 08

முல்லைத்தீவுமாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசெயலகத்துக்குட்பட்ட மன்னாகண்டல் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்குட்ப்பட்ட மன்னாகண்டல் குளம் நேற்றுமுன்தினம் அதிகாலை உடைந்துநீர்முழுவதும் வீண்விரயமாகியுள்ளது

இது குறித்து மேலும் தெரியவருவதாவது

இந்த குளம் கடந்த 2014 ஆம் ஆண்டு சுமார் 20 லட்சம் ரூபாவில் ஆழப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து 2015 இல் இருதடவைகள்அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த நிலையில் நேற்று அதிகாலை வேளையில் துருசு பகுதியில் குளம் உடைப்பெடுத்து சுமார் பத்து அடிக்கும் நீளமான அணைக்கட்டு உடைந்துள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்தவர்கள் குறித்த துருசின் கீழ்பகுதியில் பழமையான கொட்டு ஒன்றே காணப்பட்டிருப்பதாகவும் அந்த பகுதி அபிவிருத்தி பணிக்கு நிதி ஒதுக்கவில்லை எனவும் அந்த இடத்தில் உடைவு ஏற்பட்டு உடைப்பெடுத்திருக்கிறது எனவும் தெரிவிக்கின்றனர்.





இது குறித்து கருத்து தெரிவித்த பகுதி கமக்கார அமைப்பின் தலைவர் கடந்த இரண்டு மூன்று வருடமாக வறட்சி காரணமாகவும் நீர் இல்லாது விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது

இவ்வாறான நிலையில் இந்த குளத்தில் அண்மைய நாட்களாக நீர் நிறைந்து வருவதை பார்த்து சந்தோசமடைந்தோம். ஆனால், நேற்று முன்தினம் அதிகாலை இந்த குளம் உடைப்பெடுத்து குளத்து நீர் வெளியேறியுள்ளது. அதிகாரிகள் வந்து பார்வையிட்டுள்ளனர் இதனை உடனடியாக சீர் செய்யும் சாத்தியக் கூறு காணப்படுகிறது.

எனவே விரைவாக புனரமைத்தால் இனிவரும் நீரையாவது தேக்கி எமது குளத்தின் கீழுள்ள நூறு ஏக்கர் வரையான வயல் நிலங்களை காப்பாற்ற வழிவகுக்கும் எனவும் தெரிவித்தார். (இ-81)

## புதிய கடற்படை தளபதியுடன் இராணுவ தளபதி சந்திப்பு!



கொழும்பு, நவ. 08

இலங்கையின் 22 ஆவது புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரால் சிறிமேர்வன் ரணசிங்க இராணுவ தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனா நாயக்கவை சந்தித்துள்ளார்.

இராணுவத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் காலை இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

புதிய கடற் படைத் தளபதிக்கு இலங்கை இரா ணுவ காலாற் படையினரால் அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டு இராணுவ நிறைவேற்றுப் பணிப்பாளரான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா வரவேற்றார்.

இராணுவ தளபதி தம்முடன் சேவையாற்றுகின்ற இராணுவ அதிகாரிகளைபுதியகடற்படைத் தளபதிக்கு இதன்போது அறிமுகம் செய்து வைத்தார்.

இந்தச் சந்திப்பில் இவ்விரு தளபதிகளுக்குமிடையே தமது கடமைகள் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பை நினைவு கூரும் வகையில் இருவருக்கும் இடையிலான நினைவுச் சின்னங்களும் பரிமாறப்பட்டன.

## தெய்யந்தர தேசிய பாடசாலை புதிய நிர்வாகப் பிரிவு திறப்பு!



கொழும்பு, நவ. 08

மாத்தறை, தெய்யந்தர தேசியப் பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய நிர்வாகப் பிரிவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலைக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த ஜனாதிபதியை பாடசாலை மாணவர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

நினைவுப் பலகையைத் திரைநீக்கம் செய்து நிர்வாக பிரிவு உள்ளிட்ட புதிய மாடிக் கட்டடத்தை திறந்து வைத்த ஜனாதிபதி, அங்கு வைக்கப் பட்டிருந்த விருந்தினர் புத்தகத்திலும் குறிப்பொன்றை பதிவு செய்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான மஹிந்த அமரவீர, பைசர் முஸ்தபா, தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜயலால் டி சில்வா, கல்லூரி அதிபர் டபிள்யூ.டபிள்யூ.அமரசேன, ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பழைய மாணவர்கள் கலந்துகொண்டனர். (க)

## தவறான குறுஞ்செய்தி தண்டனைக்குரிய செயலாகும்!

கொழும்பு, நவ. 08

கொடூரமான அல்லது அடக்குமுறையிலான அல்லது வன்முறையிலான உண்மைக்கு புறம்பான குறுஞ் செய்திகளை அனுப்புவது தண்டனைக்குரிய குற்றமாகும் என்று இலங்கை தொலைத் தொடர்புஒழுங்குறுத்தல்ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு இவ்வாறான குறுஞ்செய்தி ஒன்றை வெளியிட்டு பொது மக்களைத் தெளிவுபடுத்துவதற்கு ஆணைக் குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

## பொதுக்கூட்டம்

கோண்டாவில்,நவ.08

கோண்டாவில் கலை வாணி சனசமூக நிலையப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கோண்டாவில் சிவபூதவராயர் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெறும். (இ)

## விஞ்ஞான ஆய்வு பிரசுரங்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கல் நிகழ்வு!

கொழும்பு, நவ. 08

விஞ்ஞான ஆய்வு பிரசுரங்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கல் விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மருத்துவம், விவசாயம் மற்றும் பொறியியல் துறைகளில் 2015 ஆம் ஆண்டில் உயர் நியமனங்களுடன் கூடிய விஞ்ஞான ஆய்வுகளில் ஈடுபட்ட 200 பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

2001 ஆம் ஆண்டில் ஆரம் பிக்கப் பட்ட விஞ்ஞான ஆய்வு பிரசுரங்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கல் விழா இம்முறை 10 ஆவது தடவையாக இடம்பெறுவதுடன், இதனைத் தேசிய ஆய்வுகள் பேரவை ஒழுங்கு செய்துள்ளது.



இந்த நிகழ்வில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆய்வுகள் இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன, அமைச்சின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன, தேசிய ஆய் வுப் பேரவையின் தலைவர் பேராசிரியர் ஜானக்க டி சில்வா, நிறைவேற்றுச் செயலாளர் மனிஷா ராஜபக்ஷ உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# மாதாந்த திரையிடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 08

யாழ்ப்பாண பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்தத் திரையிடல் நிகழ்வு எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாண பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

கனடாவில் லெனின் எம்.சிவம் என்பவரின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட '1999' எனும் 97 நிமிடங்கள் கொண்ட தமிழ்த் திரைப்படம் திரையிடப்படவுள்ளது. தொடர்ந்து ஈழத்தின் மூத்த ஓவியர்களில் ஒருவரான மு.கனகசபை பற்றிய 'தூரிகை' என்னும் 21 நிமிட விவரணப்படமும் காட்டப்படும்.

அனுமதி இலவசம் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண பொதுசன நூலக வாசகர் வட்டம் தெரிவித்துள்ளது. (இ)

## தினசரி ராசி பலன் 08.11.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஐப்பசித் திங்கள் 23 ஆம் நாள் புதன்கிழமை பஞ்சமித் திதி மாலை 7.03 மணிவரை. பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம் திருவாதிரை பகல் 3.21 மணிவரை. பின்னர் புனர்பூசம். சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 11.54 மணிமுதல் 1.21 மணிவரை.
**சுபநேரம்** - மாலை 4.39 மணிமுதல் 6.09 மணிவரை.
**திவசம் செய்ய வேண்டிய திதி**- ஐப்பசி மாத தேய்பிறை பஞ்சமி.
பிறந்த நட்சத்திர வழிபாடு: திருவாதிரை.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** விருத்தியான நாள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரிகள் மிகுந்த அபிவிருத்தியடைவார்கள். சிலருக்குப் பதவி உயர்வு கிட்டும். கோபமாய் பிரிந்த உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

**ரிஷபம்** : ஆக்கபூர்வமான நாள். வெளிநாட்டுத் தொடர்பால் கணிசமான பணவரவு உண்டு. சிலர் வெளிநாட்டுக்குச் செல்ல இடமுண்டு. உத்தியோகத்தர்கள் நன்மதிப்பைப் பெறுவார்கள்.

**மிதுனம்** : அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் பெருகவும் வாய்ப்புண்டு. புதிய முயற்சிகள் அனுகூல மாகும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும்.

**கடகம்**:அலைச்சல் மிகுந்த நாள். சிலர் வேலை தேடி அலைவார்கள். சிலர் கடன் வாங்க அலைவார்கள். சிலருடைய வீட்டில் களவுபோனதால் காவல் நிலையத்தின் உதவியை நாடுவார்கள்.

**சிம்மம்**: மகிழ்ச்சியான நாள். வெளிநாட்டுப் பணம் வந்துசேரும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். உத்தியோகத்தில் இவர்களின் திறமையால் அதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும்.

**கன்னி**: சம பலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சமமாக இருக்கும். சகோதர வழியால் மனச்சஞ்சலம் உண்டாகும். செய்தொழிலில் மிகுந்த கவனம் தேவை.

**துலாம்** : யோகமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். செய்தொழிலில் மிகுந்த முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகத்தர்கள் பதவி உயர்வைப் பெறுவார்கள்.

**விருச்சிகம்** : கவலையான நாள். பொருளாதாரம் நலிவடையும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிப்பால் வருமானம் குறையும். தொழிலில் கவனக் குறைவால் சிலருக்கு செய்யும் தொழிலை இழக்க நேரலாம்.

**தனுசு**: மத்திமமான நாள். வருமானம் சுமாராக இருக்கும். தொழிற்பிரிவினருக்கு உழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் சம லாபம் கிடைக்கும். வாகனங்களை ஓட்டும்போது கவனம் தேவை.

**மகரம்**: நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரிக்கும். முயற்சிகளில் வெற்றி கிட்டும். இதுவரை இருந்து வந்த தொல்லைகள் விலகும்.

**கும்பம்**:அதிஷ்டமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். தொழிற்பிரிவினர் உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெற்று மகிழ்வார்கள். அரசுவழியால் நன்மைகள் உண்டாகும்.

**மீனம்**:துயரமான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் உண்டாகும். உடல் நோய்வாய்ப்படும். உத்தியோகத்தர்களுக்கு கடின உழைப்பு அதிகரிக்கும்.

சந்திராட்டமநாள்: விசாகம் 4 ஆம் பாதம், அனுசம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்களில் ஈடுபடுகின்றமையைத் தவிர்க்கவும்.

# இந்தியாவிலிருந்து பெற்றோல் தருவிப்பு; லங்கா ஐ.ஓ.சி. அவசர நடவடிக்கை!




லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம், அவசரமாக 15 ஆயிரம் தொன் பெற்றோலை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய உள்ளது என அறிவித்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை அடுத்தே, இந்த அவசர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இலங்கையில் 16 வீத எரிபொருள் விற்பனைச் சந்தையை தம்வசம் வைத்திருக்கும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம், அவசரமாக பெற்றோலை இலங்கைக்கு விநியோகிப்பதற்கு பல்வேறு விநியோகஸ்தர்களையும் தொடர்பு கொண்டுள்ளது என, அதன் முகாமைப் பணிப்பாளர் சியாம் போரா தெரிவித்துள்ளார்.

நாளை அல்லது மறுதினம் இந்த பெற்றோல் சிறிலங்காவை வந்தடையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# சம்பந்தனிடம் தமிழில் கேள்வி கேட்ட நாமல்!


Namal Rajapaksa @RajapaksaNamal · 2h
கோராது மௌனமாக இருக்க முடியாது என்பதை மூத்த அரசியல்வாதி @R_Sampanthan ஐயா அவர்கள் ஏன் உணரவில்லை! (2/2) #SriLanka #lka
30 36

Namal Rajapaksa @RajapaksaNamal · 2h
அதிகாரப்பகிர்வு கிடைக்கும் என்பதை காரணம் காட்டி தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை(1/2) #SriLanka

News1st ளைஞர்களுக்கான வேலைவா...
Newsfirst.lk Sri Lanka's Number One News Provider. Website: www.newsfirst.lk Email: contact@newsfirst.lk Telephone: +94 114792700 Like us on Facebook: https:...
youtube.com

அதிகாரப்பகிர்வு கிடைக்கும் என்ற காரணத்தால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணாமல் இருக்க முடியாது என்பதை எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தன் உணரவில்லையா என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

நாமல் இந்தக் கேள்வியை தனது உத்தியோகப்பூர்வ ட்விட்டர் பக்கத்தில் தமிழில் பதிவேற்றியுள்ளார்.

"அதிகாரப்பகிர்வு கிடைக்கும் என்பதை காரணம் காட்டி தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை கோராது மௌனமாக இருக்க முடியாது என்பதை, மூத்த அரசியல்வாதி ஆர். சம்பந்தன் ஐயா அவர்கள் ஏன் உணரவில்லை!" என்றும் அவர் பதிவேற்றியுள்ளார். (க)

# அளவெட்டியில் சிவவேள்வி பெருவிழா தொடர்ந்து 12 நாள்கள் இடம்பெறும்

அளவெட்டி, நவ. 08

தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வு வேண்டி 7 ஆவது வருட திருமுறைச் சிவவேள்விப் பெரு விழா, அளவெட்டி திருவடிநிழல் மடாலயம் கூட்டுறவாளர் வீதியில் எழுந்தருளி உள்ள ஆறு முகநாவலர் திருமுறை மண்டபத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாள்கள் இடம்பெறவுள்ளன.

இதில் திருமுறை, கந்தபுராணம், திருப்புகழ்முற்றோதல், சிவமூலமந்திரம் உச்சரித்தல் என்பன இரவு பகலாக இடம்பெறும்.

இந்தத் தொடர் பிரார்த்தனையில் கலந்துகொள்ள விரும்பும் பக்த அடியார்கள் 0772262572 என்ற தொலைபேசி இலக்கத்து டன் தொடர்பு கொண்டு எதிர்வரும் 18 ஆம் திகதிக்குப் முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# பாலஸ்தான கும்பாபிஷேகம்

பருத்தித்துறை, நவ. 08

பருத்தித்துறை புலோலி திருவருள்மிகு ஸ்ரீ பார்வதவர்த்தனி சமேத ஸ்ரீமத் பசு பதீஸ்வரர் சுவாமி (பருத்தித் துறை சிவன்) கோவில் பாலஸ்தான கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 7 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி மு.ப. 10.51 மணிமுதல் 11.51 மணி வரையிலான சுப வேளையில் சுவாமிக்கும் அம்பாளுக்கும் மற்றும் பரிவார மூர்த்தி களுக்கும் பாலஸ்தான கும்பாபிஷேகம் இடம்பெறும்.

# மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், நவ. 08

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை-

**கிளிநொச்சிப் பிரதேசத்தில்** - கரைகட்டுக்குளம், நாச்சிக்குடா, நாகபடுவான், முழங்காவில், குமுழமுனை, பல்லவராயன்கட்டு, வெள்ளாங்குளம், SLLI கனேசபுரம் வெள்ளாங்குளம், 651 ஆவது படைப்பிரிவு முகாம், 652 ஆவது படைப்பிரிவு முகாம், 2 ஆவது அதிரடிப்படை முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் ஐஸ் தொழிற்சாலை

**வவுனியா பிரதேசத்தில்** - குருக்கள்புதுக்குளம், குருக்களூர், பறையனாலங்குளம், நீலியாமோட்டை

ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார். (இ)

# கருத்தமர்வு

நல்லூர், நவ. 08

'இயற்கை நல வாழ்வு' எனும் தொனிப் பொருளில் கருத்தமர்வு ஒன்று இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கலைஞர்களைப் பங்குபற்றுமாறு பிரதேச செயலர் எ.அன்ரன் யோகநாயகம் கேட்டுள்ளார். (இ)

# இலங்கையின் எரிமலை ஜி.ஜி.

**அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களைப் பற்றி பல நினைவுக் கட்டுரைகள் வெளிவந்திருந்தாலும் இன்றைய இளைஞர்களுக்கு அவரைப் பற்றிய தீர்க்கதரிசனம். தமிழ் பேசும் இனத்திற்காக அவர் செய்த செயல்கள் தெரியாமல் இருக்கலாம் என்பதற்காகவும் சில முக்கிய விடயங்களை அவரது 116 ஆவது பிறந்த தினமான இன்று (08.11.2017) வெளிப்படுத்துவது எமது நன்றிக்கடனாகும். எழுபத்தொன்பது வயது நிரம்பிய யாழ்ப்பாணம். ஆனைக்கோட்டையைச் சேர்ந்த எஸ்.எஸ். தியாகராஜா இளைப்பாறிய ஆசிரியர் ஜி.ஜியைப் பற்றி "உலக மாமேதை ஜி.ஜி" என்ற தலைப்பில் 200 பக்கங்கள் கொண்ட கைநூல் எழுதி 2 மாதத்திற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டிருந்தார். அந்நூலில் உள்ள ஒரு சில முக்கிய விடயங்கள் கீழே வெளிப் படுத்தப்படுகின்றன.**

**தொகுப்பு- கே.எம்.ரி.**

இலங்கையில் எரிமலை இருக்கிறதா? ஆம்! இலங்கையில் ஓர் எரிமலை இருக்கிறது. அந்த எரிமலை புரட்சிப் பூகம்பம் தன்னை நீதியீனமாக எதிர்ப்பவர்களை அது எரிக்கிறது. தமிழன் வாழ்விற்காக தன்னையே எரிக்கிறது. சந்துபொந்து எல்லாவிடமும் அதன் சுவாலையே வீசுகிறது. இலங்கை எங்ஙனும் ஒளியைக் கொடுக்கிறது. அதனுடைய ஒளிப் பிழம்பிலே தமிழ் அன்னைக்குத் துரோகம் செய்பவனை எரித்து விடுகிறது. துரோகத்திற்கும் ஓர் எல்லை வேண்டாமா? ஈழத்தமிழர்களையும் மலைநாட்டுத் தமிழர்களையும் காப்பதற்கே அந்த எரிமலை உண்டானது.

அந்த எரிமலை தன்னாலான கடமையைச் செய்கிறது. எரிமலையின் அடியிலே பவுணும் பொன்னும் மலிந்திருக்கின்றமை போல் தமிழன் மூச்சு இந்த எரிமலையில் தான் தங்கிக் கிடக்கிறது. தமிழனை அதுதன் சிறகால் மூடிக் காப் பாற்றுகிறது. அந்த எரிமலையின் ஒளி இந்துசமுத்திரத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அதற்குக்கிட்ட எந்தச் சிங்கள இனவாதிகள் நெருங்க முடியாது. நெருங்கினால் அவர்களையே ஒழித்துவிடும். சிங்கள இனவாதிகள் "தன்னையே தியாகம் செய்த சேர். பொன்.இராம நாதன் செய்த உதவியை மறந்து" அச்சிங்கள இனவாதிகள் தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்வதைக் கண்டு அது மனம் பொறாது அவர்களை எரித்துவிடுகிறது. தமிழர் வாழ்விற்காக அது தன்னையே தியாகம் செய்கிறது. தீங்கு செய்பவரும் எவரையும் அது எரித்துக்கொண்டுதான் இருக்கிறது. அது வேறெந்த எரிமலையும் அல்ல, ஈழத்து எரிமலை ஜி.ஜி.பொன்னம்பலம் தான். இந்தப் பொன்னம்பலம் என்ற எரிமலைதான் தமிழர்களைக் காத்து வந்தது.

நான் (கல்கி ஆசிரியர்) இலங்கைக்குச் சென்றிருந்த போது ஜி.ஜி.பொன்னம்பலத்தை இலங்கையின் எரிமலை என்று பலரும் சொன்னார்கள். தீப்பொறி பறக்கும்படி சிங்கள மந்திரிகளைத் தாக்கியும் தமிழர் உரிமைகளைத் தாங்கியும் பேசுவார். இவர் போகுமிடங்களுக்கெல்லாம் நெருப்பணைக்கப் பின்னோடு ஒரு பயர் என்ஜின் போகுமென்று வேடிக்கை யாகச் சொல்வார்கள்.

### அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தோன்றியது ஏன்?

ஜி.ஜி.பொன்னம்பலம் அரசி யலில் இறங்கிய நாள் தொடக்கம் இலங்கை அரசியல் வானில் மிகச் சக்தி வாய்ந்த ஒரு தலைவராகத் திகழ்ந்தார். அதுமட்டுமல்லாது தமிழ் மக்களின் தலைசிறந்த தலைவனாகவும் திகழ்ந்தார். இவருடைய கையில் தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலம் தங்கியிருந்தது. இதனைத் பொன்னம்பலம் அப்பழுக்கற்ற முறையில் கருதியிருந்தார்.

இன்றைய அரசியல் உலகில் ஒருவன் தனித்து நின்று போராடுவதிலும் கட்சி மூலம் போராடுவதே தமிழருக்கு விமோசனம் அளிக்குமென்று பொன்னம்பலம் கருதினார். தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும் பொன்னம்பலம் 1944ஆம் ஆண்டு "அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்" என்ற ஸ்திரமான அரசியற் கட்சியை ஸ்தாபித்தார்.

இலங்கைவாழ் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் இலங்கைவாழ் முஸ்லிம்கள் ஆகிய மக்களை ஒன்றுதிரட்டி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்ற ஸ்திரமான ஸ்தாபனத்தை ஆரம்பிக்கும் முகமாக 1944 ஆம் ஆண்டில் தமிழ் முஸ்லிம் மக்கள் வாழ்ந்த பற்பல இடங்களில் பூர்வாங்க கூட்டங்களை நடத்தினார். இதில் சிறுபான்மை மக்க ளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு ஸ்திரமான அரசியல் கட்சி வேண்டுமென்றார்கள். இக்கட்சி மூலம் தமிழ் முஸ்லிம்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றார்கள். இம் மூன்று சமூகங்களையும் ஒன்றுதிரட்டிய பெருமை. ஜி.ஜி.யையே சாரும்.

### அரசியல் நிபுணர் சோல்பெரி ஆணைக்குழு இலங்கை வருகை

1939ஆம் ஆண்டு சோல்பெரிப்



பிரபுவைத் தலைவராகக் கொண்ட கமிஷன் ஒன்று இலங்கைக்கு வந்தது. இந்தக் கமிஷனில் சேர்.பிரெட்ரிக் பரோஸ் சேர்.பிரெடரிக்றீஸ் (பின்னர் வங்காள சுவர்னராக நியமிக்கப் பெற்றவர்) என்பவர்கள் அங்கத்தவர்களாக இருந்தார்கள். குடியேற்ற நாட்டுக் காரியாலயத்து ரவோட் சிமித் இந்தக் கமிஷனுக்கு காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். 1941ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தொடக்கம் 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை இந்தக் கமிஷன் இலங்கையில் பல இடங்களையும் தரிசித்து அவர்கள் இந்நாட்டில் பல்வேறு ஸ்தாபனங்கள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றினதும் பொது மக்களினதும் கருத்துக்களை ஆராய்ந்து இலங்கைக்குப் பொருத்தமான யாப்பு ஒன்றினைத் தயாரிக்க இருந்தனர்.

### தன்னிகரில்லாத தனிப்பெரும் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம்

ஜி.ஜி.பொன்னம்பலம் சோர்பரிக் கமிஷன் முன் சமநிலைப் பிரதிநிதித்துவத்திற்காக வாதிட்டார். தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லாத தனிப்பெரும் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலத்தை இலங்கைத் தமிழ் இந்தியத் தமிழ் முஸ்லிம், மலே, பறங்கியர் ஆகிய சிறுபான்மைச் சமூகத் தலைவர்கள் சோல்பெரிக்கமின் முன் அவரே வாதாட வேண்டுமென்று நின்றனர். எங்கள் பலம் பொன்னம்பலம் என்றிருந்த காலம்.

இவரைத் தேர்ந்தெடுத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சேர்.அ.மகாதேவா, ச.நடேசபிள்ளை, ரி.பி.ஜாயா, தொண்டமான, அசீஸ், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், டாக்டர் டி.ஈ.எம்.வி.நாகநாதன், ஓடிட்டர் ஜெனரல் கனகரத்தினம், ஏ.எஸ்.தம்பியையா, தம்பியப்பா, முதலியார் முத்துத்தம்பி இவர்கள் எல்லோரிலும் பார்க்க பொன்னம்பலம் வயதில் குறைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சம பிரதிநிதித்துவம் கோரிக்கையை முன்வைப்பதற்கு தலைமை தாங்க சிம்மக்குரலோன் ஜி.ஜி.பொன்னம்பலம் அழைக்கப்பட்டார். அவரின் ஆங்கில நாவன்மைக்கு மயங்காதவர் யார் தான் உள? வெஞ்சினமாகச் சிலிர்த்தெழுந்து கங்கைநதி பெருக்கெடுத்தது போல் சமபலப் பிரதிநிதித்துவத்தை சோல்பெரி ஆணைக்குழு முன் எடுத்துரைத்தவர்.

ஒரு பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனம் ஒன்றின் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்பது அவரின் நோக்கமாகும். தமிழர்களுக்கு பின்னர் வரப்போகும் இன்னல்களை முன்கூட்டியே அறிந்த ஜி.ஜி.பொன்னம்பலம் இக்கோட்பாட்டை முன்வைத்தார். அந்தச் சாட்சியத்தில் டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் தமிழர்கள் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டனர் என்பதைப் பல ஆதாரங்களோடு விளக்கினார்.

சமப் பிரதிநிதித்துவம் கோட்பாடு பற்றி அவர் ஆற்றிய உரையில் குறிப்பிடப் பட்டிருப்பதாவது:

"பரிந்துரைகள் குறித்து எனக்கிருந்த ஏமாற்ற உணர்வைச் சரியான வார்த்தை கொண்டு வர்ணிக்க முடியாதவனாய் இருக்கின்றேன். உண்மையான ஜன நாயகம் ஒருதலைப்பட்டு கட்டளையிடுவதால் ஆளுமை செய்பவர்களின் வாத முறைசாரா ஆணைக்கூற்று ஆளப் படுபவர்களின் சம்மதத்தின் இடத்தை எடுக்க இயலாதென்பதையும் எவ்வகை வடிவத்திலான ஜனநாயக அரசாங்கமாக இருந்தாலும் அதற்கான முறையான உறுதித் தன்மைக்கு அத்திவாரமாய் இருப்பது ஆளப்படுபவர்களின் ஒப்புதலே என்பதையும் மேதகு தேசாதிபதி அறிந்திருக்க வேண்டும். இறுதியாக இந்நாட்டிலுள்ள சிறுபான்மையினரால் முன் வைக்கப்பட்டுள்ள கருத்துக்களையும் கோரிக்கைகளையும் வழங்கவேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் எமது நாடாளுமன்றத்தை இந்தச் சபையை முரண்படுகின்ற பகைமையைக் கொண்ட நலங்களின் தூதுவர்களாகக் கொண்ட ஒரு சபையாக அல்லாமல், ஒட்டுமொத்தமான இலங்கையர்களின் நலன் ஒன்றையே தம் விருப்பமாகக் கொண்டு அதன்மூலம் உயிரூட்டப்பட்ட மக்களின் அனைத்துப் பிரிவினதும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய திட்டவட்டமான சபையாக ஆக்குமாறு பேரரசின் ஸ்தாபகர்களுக்கு, நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். என்றார்.

அரசமைப்பு சீர்திருத்தத்திற்கான சோல்பெரி ஆணைக்குழுவினால் தமிழ்க் காங்கிரஸின் சாட்சியம் வழங்கப்பட்ட மூன்று நாள்களில் ஒருநாள் முழுவதும் மலைநாட்டுத் தமிழர்களுக்காக ஜி.ஜி. பொன்னம்பலம் வாதாடினார்.

சோல்பெரி ஆணைக்குழுவை மந்திரத்தால் கட்டுண்ட நாகத்தின் நிலைக்குத் தள்ளி அவர் உரையை மீண்டும் மீண்டும் ஆற்ற, அவர்களைக் கோர வைத்த பெருமை ஜி.ஜிக்கே உண்டு. சோல்பெரி ஆணைக்குழுவினர் இவர் மட்டும் ஒரு சிங்களவராக இருந்தால் வாழ்நாள் முழுவதும் இலங்கையின் பிரதமராக இருப்பார். என்று கூறினார். ஆனால் ஜி.ஜியின் சமநிலைப் பிரதிநிதித்துவக் கோரிக்கையை சோல்பெரி ஆணைக்குழுவினர் ஏற்காதபோதிலும் அரசியல் சாசனத்தின் 29ஆம் பிரிவு 1 இல் சில பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறுபான்மையினரின் நன்மை கருதி உட்புகுத்த வேண்டுமெனச் சிபார்சு செய்தனர். அதுமட்டுமல்ல, இந்தியப் பிரசைகளுக்கு நாடாளுமன்றத்தில் 14 வீதமான ஆசனங்கள் ஒதுக்கப்பட வேண்டுமெனவும் சிபாரிசு செய்தனர்.

1. "இவருடைய பேச்சைக் கேட்ட நாம் மகுடிக்குக் கட்டுண்ட நாகம் போலானோம்". – சோல்பெரிக் கமிஷனர்.

2. "இவர் மட்டும் ஒரு சிங்களவராக இருந்திருந்தால் தன் வாழ்நாள் முழுவதும் இலங்கையின் பிரதமராக இருந்திருப்பார்". – சோல்பெரிக் கமிஷனர்.

3. ''இப்படியான ஒரு பேச்சை இன்னொருவர் பேசியதை நான் என் வாழ்நாளில் கேட்டதில்லை என்று கூறினார்'' – றொபேட் மார்ஸ் வைஸ் சான்சலர்–பேராதனை பல்கலைக்கழகம், இலங்கை.

சோல்பெரிக் கமிஷனரின் அறிக்கையை ஜி.ஜி.நிராகரித்தார்.

ஜி.ஜியின் சமப்பிரதி நிதித்துவக்கோட்பாட்டை சோல்பெரிக் கமிஷனர் நிரா கரித்ததையடுத்து ஜி.ஜி. பொன்னம்பலம் சோல்பெரிக் கமிஷன் அறிக்கையை தங்களால் ஏற்கமுடியாதென்று தந்தி மூலம் பிரித்தானிய அரசுக்கு அறிவித்தார்.

### சோல்பரியை ஜீ.ஜீ. பின்வருமாறு வர்ணித்தார்

சமநிலைப் பிரதிநிதித்துவக் கோட்பாட்டை நிராகரித்த சோல்பரியை தமிழினத்தின் ஆன்மாவை புதைக்க வந்த சோல்பரியை நாம் நம்ப முடியாது. சோல்பரி ஒற்றைக் கண்ணுடையவராக இருந்ததினால் ஒற்றைக் கண்ணனின் ஒற்றையாட்சி தமிழினத்தை அடியோடு அழித்துவிடும் என்றார். சோல்பரி ஜீ.ஜீயின் சமப் பிரதிநிதித்துவம் கோரிக்கையை நிராகரித்ததை எதிர்த்து பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் வாதாடத் தன் சொந்தப் பணத்தில் லண்டன் பயணமானார்.

அந்நேரம் சமநிலைப் பிரதிநிதித்துவக் கொள்கையில் ஜீ.ஜீ. வெற்றிபெற்றால் தங்களுக்குக் கிடைக்கப்போகின்ற ஏகபோக அரசியல் அதிகாரங்களுக்கு பங்கம் ஏற்பட்டுவிடும் என இனவாத சிங்களத் தலைவர்கள் வெதும்பினர். சிங்களத் தலைவர்கள் அரசியல் அதிகாரங்கள் யாவும் தங்கள் கைகளில் இருக்க வேண்டுமென்று விரும்பினர்.

சமநிலை பிரதிநிதித்துவக் கொள்கையை ஜீ.ஜீ. தலைமை தாங்க, யாழ். குடாநாட்டுத் தமிழர் ஏகோபித்து ஆதரித்தனர். அதனால் யாழ்ப்பாண மக்களுக்கு வேண்டிய அபிவிருத்தியை நிறை வேற்றுவோம் எனக் குரல் கொடுத்தனர் தெற்கின் இனவாத அரசியல் தலைவர்கள். அதற்கு ஆதாரமாக ஒரு சில தமிழ்த் தலைவர்கள் ஆதரித்த படியால் அக்கொள்கை தோற்கப்படவேண்டிய நிலை தமிழினத்திற்கு ஏற்பட்டது. ★

# அழிவுகளுக்கே வழிவகுக்கும் ஒற்றையாட்சி மனோநிலை !

ஆங்கிலத்தில் - சஞ்ஜீவ பெர்னாண்டோ
வழிமூலம் - Daily mirror
மொழியாக்கம் - நித்தியபாரதி

Supreme Court சந்திர சோமா எதிர் சேனாதிராஜா வழக்கு (SC Spl 03/2014 - Decided on 04/08/2017) தொடர்பாக இவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் இலங்கை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு மக்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. தற்போது இடம் பெறும் புதிய அரசமைப்பு மீதான விவாதம், அரசமைப்பு எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வில்லை போல் தெரிகிறது.

இந்த நாட்டின் அரசியல் நடவடிக்கைகள் பல பத்தாண்டுகளாக ஒற்றையாட்சி மேலாதிக்கம் மூலம் செல்வாக்குச் செலுத்தப்படுகின்ற போதிலும் இந்த ஆட்சி சமத்துவத்தைக் கடைப்பிடிக்கவில்லை. கூட்டாட்சி என்பது பிரிவினைவாதத்திற்கு ஒப்பானதல்ல என்கின்ற பிரகடனம் இது தொடர்பான நீதித்துறையின் விளக்கத்தில் எவ்வாறான மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதைக் குறித்து நிற்கிறது.

நான் இப்பத்தியில் சந்திரசோமா எதிர் சேனாதிராஜா வழக்கின் தீர்ப்புத் தொடர்பாகவும் அதன் கல்விசார், சட்ட மற்றும் அரசியல் உட்பொருள்கள் தொடர்பாகவும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நான் சட்டக்கல்லூரி மாணவனாக இருந்தபோது, ஒற்றையாட்சி மட்டுமே எமக்கான தீர்வு என்பதை எவ்வாறு எமது அரசமைப்புச் சட்டப் பாடத் திட்டத்தில் உருவகிக்கப்பட்டிருந்ததை நான் அறிந்து கொண்டேன். எமது நாட்டிற்கு ஒற்றையாட்சி மட்டுமே ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு என்பது இப்பாடநெறியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நாங்கள் கூட்டாட்சி தொடர்பாக கற்றபோதிலும், இது ஒற்றையாட்சி போன்று சட்ட ரீதியாக பொருத்தப்பாடானதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக உருவகிக்கப்படவில்லை. ஒற்றையாட்சி மேலாதிக்க மனோநிலை கூட்டாட்சிக்கான எண்ணக் கருவை முற்றாக அழித் தொழித்தது.

அதாவது, கூட்டாட்சி என்பது தனிநாடு அல்லது பிரிவினைவாத ஆட்சி என்கின்ற தவறானமொழி பெயர்ப்பை வழங்கியது. ஒற்றையாட்சி எதிர் கூட்டாட்சி விவாதம் எப்போதும் தேசப்பற்றாளர்கள் மற்றும் தேசத்துரோகிகளுக்கு இடையிலான விவாதமாகவே நோக்கப்படுகிறது.

சிங்களப் பெரும்பான்மையைப் பொறுத்தளவில், கூட்டாட்சி, சுயநிர்ணயம், தமிழ் மக்களின் அரசியல் அவாக்கள் போன்றன மிகச் சாதரணமாக ஈழம் போன்ற கருத்துக்களுக்கு ஒப்பாகவே நோக்கப்படுகிறது. ஒரு சில சிங்களப் புலமைவாதிகள் மாத்திரமே கூட்டாட்சி என்பது ஒரு மாற்றுவழி ஆட்சிக் கட்டமைப்பு என்பதையும் இது சட்டரீதியானது என்பதையும் ஏற்றுக்கொண்டுள்ள னர்.

இரு தரப்பைச் சேர்ந்த தீவிர இனவாதிகள் கூட்டாட்சி மற்றும் ஒற்றையாட்சி என்ற சொற் பதங்களைத் தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர். இதுவே அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற அரசியற் கட்சிகள் எதிரிகளாகப் பார்க்கப்படுவதற்கான காரணமாகும்.

அரசமைப்பின் புறக்கணிப்புக்களைத் தெளிவுபடுத்துவதற்காக உயர் நீதிமன்றில் இந்த வழக்குத் தாக்கல் செய் யப்பட்டது. அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் அதில் அங்கம் வகிப்பவர்கள் இலங்கையில் தனிநாட்டை அமைப்பதற்கான நோக்கத்தைக் கொண்டுள்ளனர் என இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டது. இந்த வழக்கின் தீர்ப்பு இங்கு சுருக்கமாகத் தரப்படுகிறது:

* கூட்டாட்சி என்பது பிரிவினைவாதம் அல்ல. இது சட்டத்திற்கு மாறானதல்ல.
* தமிழ் மக்கள் தமக்கான சுயநிர்ணயத்தைப் பெற்றுக் கொள் வதற்கான உரிமை, சட்ட ரீதியானது மட்டு மன்றி இது உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டஓர் உரிமையாகும்.
* அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி போன்ற கட்சிகள் தமக்கே உரித்தான சட்ட உரிமையுடன் கூட்டாட்சி தொடர்பான கோரிக்கையை முன்வைக்கின்றன.
* அதிகாரப் பரவலாக்கல் என்கின்ற வார்த்தைப் பிரயோகம் தொடர்பாகப் பல்வேறு வரையறைகளை முன்வைப்பதால் ஒற்றையாட்சி அல்லது கூட்டாட்சி என நாடுகளுக்கு முத்திரை குத்துவதால் தவறான வழி நடத்தல் ஏற்படலாம்.

1987இல் உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் மற்றும் 13 ஆவது திருத்தம் பிரச்சினையைத் தீர்க்கும் 13 ஆவது திருத் தச் சட்டத்தின் பின்னரான அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையிலான உயர் நீதிமன்றின் மிக முக்கிய தீர்ப்பாக இது காணப்பட்டது. மாகாண சபைகள் இந்த நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையை நீர்த்துப் போகச் செய்யவில்லை எனத் தீர்ப்பளிக்கப்பட்ட போதிலும், அரசமைப்பு அதிகாரப் பகிர்வு தொடர்பாக எதனை அனுமதித்துள்ளது என்பது தொடர்பாக மிகக் குறுகிய உறுதியான விளக்கம் வழங்கப்பட்டது.

கூட்டாட்சிபிரிவினைவாதம் அல்ல என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதாவது, ஒற்றையாட்சி நாட்டிற்குள் சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் ஆட்சி முறைமையாக இது அறிவிக்கப்பட்டது.



> இரு தரப்பைச் சேர்ந்த தீவிர இன வாதிகள் கூட்டாச்சி மற்றும் ஒற்றை யாட்சி என்ற சொற் பதங்களைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். இதுவே அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு போன்ற அரசியற் கட்சிகள் எதிரிகளாகப் பார்க்கப்படுவதற்கான காரணமாகும்.

ஆனாலும், கூட்டாட்சி என்பது பிரி வினைக்கு வழிவகுக்கும் எனத் தவறாக விதந்துரைக்கப்பட்டுள்ளது. 1972 வட்டுக்கோட்டை மாநாடு மற்றும் திம்புப் பேச்சு போன்றவற்றில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாகவும் இவையே தீர்ப்பாக உள்ளதாகவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தமிழ் மக்கள் தமக்கான சுயநிர்ணய உரிமையுடன் தமக்கான தனிநாட்டைக் கோருவதாக சிங்கள சமூகத்தின் மத்தி யில் தவறாக கற்பிதம் செய்யப்பட்டது. இதனால் புதிய அரசமைப்பை உருவாக்கும் போது ஒற்றையாட்சிக்குள் கூட்டாட்சியை ஏற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்ட கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் உருவாக்கப்பட்ட ஆறாவது திருத்தச் சட்டத்தில் ஒற்றையாட்சியே சிங்கள சமூகத்திற்குச் சொந்தமானது எனக் கூறப்பட்டுள்ளது. இதன்மூலம் தனிநாட்டிற்கு எதிராக அரசும் அரச அதிகாரிகளும் உறுதிமொழி எடுக்க வேண்டும் எனக் கோரப்பட்டது.

இதனால் அரசில் அங்கம் வகிப்பவர்கள் எவரும் கூட்டாட்சிக்கு ஆதரவளிக்க முடியாது என்கின்ற நிலை காணப்படுகிறது. உண்மையில் இது அதிகாரத்துவம் மிக்கதாகவும் ஜனநாயகம் மற்றும் சட்டத்திற்கு மாறானதாகவும் காணப்படுகிறது.

தமிழ் அரசியல்வாதிகள் உறுதிமொழிக்கு மாறாகக் கூட்டாட்சிக்கு ஆதரவளிப்பதால் அவர்கள் பிரிவினைவாதத்தைக் கோருகின்றனர் என நோக்கப்படுகிறது. கூட்டாட்சி மற்றும் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாகத் தமிழ் அரசியல்வாதிகள் பரப்புரை செய்கின்றமை பிரிவினைவாதமாக நோக்கப்படுகிறது. இரண்டு பக்கமும் ஒற்றையாட்சி என் கின்ற பெயரைக் கொண்ட நாணயமாக இருப்பதற்கு அரசமைப்பு மீதான விவாதம் தேவையற்ற ஒன்று எனக் கூறப்படுகிறது.

அதாவது இரு பக்கமும் ஒற்றையாட்சியைக் கொண்ட ஒரு விவாதத்தில் கலந்துகொள்வதற்குத் தீவிரவாத அர சியற் கட்சிகள் தயாராக இல்லை. ஒற்றையாட்சி மட்டுமே சட்ட ரீதியானது. கூட்டாட்சி, மிகவும் மோசமானது எனக் கருதும் அரசியற் கட்சிகள் இந்த விவாதத்திற்கு மறுப்புத் தெரிவிக்கின்றன.

நீண்ட காலமாக நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மூலம் ஆளப்படும் சமூகம் சட்டம், தார்மீகம், அரசியல் மற்றும் அரசமைப்பில் கூட்டாட்சி தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைத்தன்மை தொடர்பாகவும் ஒற்றையாட்சிக்குப் பதிலாகக் கூட்டாட்சியைத் தெரிவுசெய்ய முடியும் என்பது தொடர்பாகவும் விளக்கமற்றுக் காணப்படுவது நகைப்பிற்குரியதாகும்.

எமது நாடு சுதந்திர மடைந்து 70 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முதலாகத் தற்போது கூட்டாட்சி தொடர்பாகவும் இதன் மூலம் அதிகாரப் பகிர்வு நேரடியாக இடம் பெறும் என்பது தொடர்பாகவும் விவாதிக்கப் படுவது மிகக் கொடுமையானதாகும்.

சிங்கள சமூகம் அறிவார்ந்த சமூகமாக உள்ளதா அல்லது உணர்ச்சி மிகுந்த சமூகமாக உள்ளதா என்பது இன்னமும் தெளிவாக வில்லை.

> சிங்கள சமூகம் அறிவார்ந்த சமூகமா...? உணர்ச்சி மிகுந்த சமூகமா...?

உயர் நீதிமன்றின் தீர்ப்பு தேசிய அரசியல் -வரலாற்றை அடிப் படையாகக் கொண்டுள்ளதுடன், நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைப் பெற்றுத் தருவதற்கான தார்மீக, அரசியல் மற்றும் அரசமைப்புச் செயற்பாட்டை நோக்காகக் கொண்ட சட்டத் தீர்வாகவும் நோக்க முடியும்.

இதேவேளையில், எமது நாட்டில் முப்பது ஆண்டுகளாக இடம்பெற்ற கற்பனை செய்ய முடியாத உயிர்ச் சேதங்கள் மற்றும் அழிவுகள் போன்றவற்றை நாம் நேரில் கண்ட பின்னரும் ஒற்றையாட்சி என்பது தொடர்பாகக் குறுகிய மனநிலையுடனும் அதிகாரத்துவ மனநிலையுடனும் தொடர்ந்தும் இருந்தால் இந்த அழிவுகள் இன்னமும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். ★



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்தூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



150




## அத்தியாயம் - VIII

## சந்திரிகாவின் நிபந்தனைகள்



முதலாவதாக, வடக்கு-கிழக்கில் அரச நிர்வாகத்தைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்றும், அரச சொத்துடைமைகளை தாக்கி அழிக்கக் கூடாது என்றும், விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் உறுதியளிக்க வேண்டும். இரண்டாவதாக, ஆகாய கடல் மார்க்கமாக வடக்கு-கிழக்கு பிரதேசத்துக்கு செய்யப்படும் விநியோகத்துக்கு எவ்வித குந்தகமும் இழைக்கப்படக் கூடாது. மூன்றாவதாக, நாடு அடங்கிலுமுள்ள அரச சொத்துடைமைகள் எதனையும் தாக்கியழிக்கக் கூடாது. நான்காவதாக, தடுத்துவைக்கப்பட்டிருக்கும் எல்லாப் போர்க் கைதிகளையும், (செஞ்சிலுவைச் சங்கத்துக்குத் தெரிந்தவர்களையும் தெரியாதவர்களையும்) உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். செஞ்சிலுவைச் சங்கத்துக்குத் தெரியாமல், புலிகள் இயக்கம் 250 போர்க் கைதிகளை சிறை வைத்திருக்கிறது என அரசு எண்ணியிருந்தது. ஐந்தாவதாக, புலிப் படையில் இணைக்கப்பட்ட 18 வயதுக்கு உட்பட்ட போராளிகள் அனைவரையும் இயக்கத்திலிருந்து நீக்கி, உற்றார், உறவினரிடம் கையளிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் சங்கடமான நிலையை சந்திரிகா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைகிறாள் என்பதை அவர் முன்வைத்த நிபந்தனைகளில் இருந்து நாம் ஊகிக்க முடிந்தது. இந்த நிபந்தனைகள் எல்லாம் இராணுவ ரீதியானவை, கடுமையான சிறுநீரக நோயால் உயிருடன் போராடிக் கொண்டிருக்கும் ஒரு மனிதரை வெளிநாட்டுக்குச் செல்ல அனுமதிக்குமாறு விடுத்த மனிதாபிமானக் கோரிக்கைக்கும் இந்த நிபந்தனைகளுக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை. இது சந்திரிகாவின் ஈவிரக்கமற்ற, வஞ்சகமான மனநிலையையே எடுத்துக் காட்டியது.

நானும் பாலாவும் உடனடியாகவே இந்த நிபந்தனைகளை நிராகரித்து விட்டோம். இயக்கத்தை அவமதிக்கும் இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொள்கின்றமையை விட தன்மானத்துடன் சாகின்றமையே மேலானது என பாலா தீர்மானித்தார்.

இப்படியான ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளைத் திணிக்க முனைந்த சந்திரிகா மீதும் கதிர்காமர் மீதும் பிரபாகரன் கடும் கோபம் கொண்டார். அரசின் மனிதாபிமானமற்ற நிலைப்பாடு, புலிகளின் தலைமைப் பீடத்துக்கு சந்திரிகா மீது ஓர் ஆழமான கசப்புணர்வை ஏற்படுத்தியது. எதிர்காலத்தில் சமாதானத்துக்கான வாய்ப்பை ஏற்படுத்தும் ஒரு மானிதாபிமானக் கோரிக்கைக்கு சிறிதளவு காருணியம் காட்ட மறுக்கும் இவர், மிகவும் கடினமான, சிக்கல் நிறைந்த இனப் பிரச்சினையை எப்படித் தீர்த்து வைப்பார்? அந்த நேரத்தில், விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தில் இப்படியானதொரு கேள்விதான் மேலோங்கி நின்றது.

இந்தச் சூழ்நிலையில், ஓர் அதிசயம் நிகழ்ந்தது போன்று, மோசமடைந்து வந்த பாலாவின் நோயில் சிறிது தணிவு ஏற்பட்டது. இரத்த மாதிரிக் கூறுகளின் பரிசோதனையிலிருந்து இது புலனாகியது. எனினும், மருத்துவ சிகிச்சைக்காக பாலாவை வெளிநாட்டுக்கு அனுப்பவேண்டிய அவசியம் இருக்கத்தான் செய்தது. மருத்துவ வசதியற்ற வன்னிச் சூழ்நிலையில், சிகிச்சை எதுவுமின்றி பாலாவை வைத்திருக்கின்றமை ஆபத்தானதென மருத்துவர்கள் கருதினார்கள்.

ஒவ்வொரு நாளும் பாலாவைப் பாராமரிப்பது எனக்குப் பெரிய பாடாகப் பட்டது. உணவுக் கட்டுப்பாடு மிகவும் இறுக்கமாக இருந்தமையால் பாலா மிகவும் மெலிந்து வாடிப்போயிருந்தார். அப்பொழுது மாரி காலம் அணிமித்துக் கொண்டிருந்தது. மாரி காலம் தொடங்கினால்,பேய் மழையும் பெரும் காற்றுமாக சில மாதங்களுக்குக் கடல் கொந்தளிப்பாக இருக்கும். அந்தக் காலத்தில், கடற் பயணம் சாத்தியமாக இருக்காது. எனவே, மாரி காலத்துக்கு முன்பாக, கடற் பயணம் செய்யும் உடல் நிலையில் இருக்கும் வேளையில் பாலாவை வன்னியிலிருந்து அப்புறப்படுத்த வேண்டுமென்பது எனது அவா. பிரபாகரனும் மதிவதனியும் எமது வீட்டுக்கு வந்தார்கள். அப்பொழுது எனது மனதிலிருந்த ஏக்கம் உணர்வுபூர்வமாக வெளிப்பாடு கண்டது. பாலாவின் கொடிய நோய் பற்றியும், அதற்கு உடன் சிகிச்சை அளிக்க வேண்டிய அவசியம் பற்றியும், இதில் தாமதம் ஏற்பட்டால் பாலாவின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்பது பற்றியும் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாது திணறியபடி நான் அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன். எனது மனக் கலக்கத்தைக் கண்டதும் பிரபாகரனுக்கு நிலைமை புரிந்து விட்டது. பாலா மீது அவருக்கு அன்பும் மதிப்பும் உள்ளன. அத்தோடு, எனது கணவரின் உடல் நலத்திலும் ஆழமான அக்கறையும் உண்டு. தனக்குள்ள சக்தியையும் வளங்களையும் பிரயோகித்து 'பாலா அண்ணாவை' வெளிநாட்டுக்கு அனுப்பிச் சிகிச்சை பெற வழிசெய்வேன் என எனக்கு வாக்களித்து ஆறுதல் கூறினார் பிரபாகரன். சொல்லியபடியே உடன் செயற்பட்டார். பாலாவை வெளியேற்றுவதற்காக ஒரு கப்பலை ஒழுங்கு செய்யுமாறு இயக்கத்தின் சர்வதேச செயலகத்துக்குப் பணித்தார். ஒரு சில வாரங்களில், முல்லைத்தீவுக்குச் சமீபமாக ஆழ் கடலில் ஒரு கப்பல் எமக்காக நக்கூரமிட்டுக் காத்திருக்கிறது என அறிந்தோம்.



நாம் தமிழீழத்தை விட்டுப் பயணிக்கப் போகிறோம் என்ற தகவல் பரவியதும், இயக்கத்தின் தலைவர்களும் போராளிகளும் நண்பர்களுமாக எமது வசிப்பிடத்துக்குப் படையெடுத்தனர். நாம் புறப்படும் தினமான 1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதி நெருங்கி வந்த நாள்களில் கவலை காரணமாக எனக்குப் பசியே தோன்றவில்லை. பாலா புறப்பட்டுச் செல்கின்றமை அவசியம்தான். ஆனால், போராட்டத்தையும் மக்களையும் விட்டுச் செல்கின்றமையை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. நாம் புறப்படும் நாளன்று பிற்பகல் தமிழேந்தி எமது வீட்டுக்கு வந்தார். அப்பொழுது நேரம் நெருங்கி விட்டது என்பதை உணர்ந்தேன். எம்மை ஏற்றிச் செல்லும் 'பஜரோ' வாகனத்துடன் தமிழ்ச்செல்வன் வந்தார். புறப்படும் வேளை மிகவும் அண்மித்து விட்டது என்பதை உணர்ந்தேன். முல்லைத்தீவுக் கரையோரமுள்ள கடற் புலிகளின் தளத்துக்கு எம்மைக் கூட்டிச் செல்வதற்காக சூசையின் வாகனம் எமது வீட்டுக் காணிக்குள் நுழைந்த போது நாம் சீக்கிரமே புறப்பட்டுச் செல்லப் போகிறோம் என்பதை உணர்ந்தேன். இறுதியாக பிரபாகரனுக்காகக் காத்திருந்தோம். அவர் வந்ததும் பாலாவுடனும் என்னுடனும் சிறிது நேரம் உரையாடி விட்டு எமக்குப் பிரியா விடை தந்தார். எல்லோரும் தமது சோகத்தை மறைப்பதற்காக கிண்டலும் கேலியுமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

பதினைந்து வருடங்களுக்கு மேலாக, மிகவும் பாசத்துடன் வளர்த்த தனது விசுவாசமான நாய் ஜிம்மியின் சோகமான முகத்தை உற்றுநோக்க முடியாது திணறிய எனது கணவர், தனது உணர்ச்சியை அடக்கியவாறு தமிழ்ச்செல்வனின் வாகனத்தில் ஏறி அமர்ந்து கொண்டார். நான் ஜிம்மியின் தலையைத் தடவி விட்டேன். பின்பு அங்கு குழுமிநின்ற எல்லோரையும் ஒருதடவை நோட்டம்விட்டு இறுதியாக பிரபாகரனைப் பார்த்தேன். அது தான் இறுதிக் கட்டம். எமது வாகனம் வீட்டிலிருந்து விரைவாகப் புறப்பட்டுச் சென்றது.

(தொடரும்...)

வழிமூலம் - சண்டே ஒப்சேவர்
மொழியாக்கம் - கார்வண்ணன்

# கீதா குமாரசிங்கவின் தகுதியிழப்பு தீர்ப்பு; தேர்தல் முடிவையே மாற்ற வழி செய்யுமா?



2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு கீதா குமாரசிங்க தகுதியற்றவராக இருந்தார் என்று உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை அடுத்து, ஏனைய குறைந்தது ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மோசமான விளைவுகள் ஏற்படக் கூடும் என்று சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

திரை நட்சத்திரமாக இருந்து அரசியல்வாதியாக மாறிய கீதா குமாரசிங்கவை நீக்கி, மே 3 ஆம் திகதி மேல்முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பை பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் தலைமையிலான ஐந்து நீதியரசர்களின் அமர்வு, உறுதி செய்தது.

சுவிற்சர்லாந்தின் குடியுரிமையையும் கொண்டிருந்தமையால், அவர் வேட்பாளராக இருப்பதற்குத் தகுதியற்றவர் என்று நீதிமன்றம் அறிவித்திருந்தது.

குமாரசிங்க தாம் சுவிஸ் குடியுரிமையைக் கொண்டிருந்தார் என்றும், 2015 ஒகஸ்ட் தேர்தலுக்குப் பின்னர், தமது குடியுரிமையை நீக்குமாறு சுவிஸ் அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார் எனவும் ஒப்புக்கொண்டார் என்றும், நீதியரசர் சிசிர டி ஆப்ரூ, 26 பக்கங்களில் இருந்த அந்தத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

சுவிஸ் அதிகாரிகளுக்கு கீதா குமாரசிங்க 2015 ஒகஸ்ட் 25ஆம் திகதி அனுப்பிய கடிதத்தைக் கருத்தில் கொண்டு, அவர், 25.08.2015 அன்று தமது சுவிஸ் குடியுரிமையை விட்டுக்கொடுக்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டார் என முடிவுக்கு வர முடியும்.

இந்தக் கடிதத்தின் மூலம், கீதா குமாரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட போது, சுவிஸ் மற்றும் சிறிலங்கா இரட்டை குடியுரிமையைக் கொண்டிருந்துள்ளார் என்பது தெளிவாகியுள்ளது.

அவர் ஒரு வேட்பாளராகத் தகுதியற்றவர் என்பதே மேன் முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் முடிவாக உள்ளது, இதன் அர்த்தம், அவரது பெயர், நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்க முடியாது.

17.08.2015 நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கு கீதா குமாரசிங்க தகுதியற்றவர் என்று நீதியரசர் டி ஆப்ரூ கூறியிருந்தார். அதனை ஏனைய நான்கு நீதியரசர்களும் ஏற்றுக் கொண்டிருந்தனர்.

கீதா குமாரசிங்கவை வேட்பாளராக நிற்கத் தகுதியற்றவர் என்ற தீர்ப்பு, அவரது பெயரை உள்ளடக்கிய காலி மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒட்டுமொத்த வேட்பாளர் பட்டியலையுமே, மோசமான சூழ்நிலைக்குள் தள்ளுவதாக அமையும்.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும் போது, எதிர்ப்புகள் எழுப்பப்பட்டன. அரசமைப்புக்கு முரணாக, இரட்டைக்குடியுரிமை கொண்ட கீதா குமாரசிங்கவின் பெயரை உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் காலி மாவட்ட வேட்பாளர் பட்டியலை நிராகரிக்க வேண்டும் என்று ஏனைய கட்சிகள் கோரியிருந்தன.

எனினும், தெரிவத்தாட்சி அதிகாரி, தெரிந்தோ தெரியாமலோ அந்தக் கோரிக்கைகளை நிராகரித்து, நீதிமன்றத்தின் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்குமாறு ஜே.வி.பி., மற்றும் ஐ.தே.கவினருக்குக் கூறியிருந்தார். அவர்கள் அதனை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளனர்.

காலி மாவட்டத்துக்கான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியல் நிராகரிக்கப்பட்டிருந்தால், நாடாளுமன்றத்தில் அதிகார சமநிலை வேறு விதமாக அமைந்திருக்கும்.

> பொருத்தமற்ற வேட்பாளராக அறிவிக்கப்பட்டு கீதா குமாரசிங்க நீக்கப்பட்ட பின்னர், அது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் பாதிப்பை ஏற்படுத்தாது என்று தேர்தல் அதிகாரிகள் முன்னர் வாதிட்டிருந்தனர். எனினும், பல சட்ட நிபுணர்கள் அந்தக் கருத்தில் இருந்து வேறுபடுகிறார்கள்.


பொருத்தமற்ற வேட்பாளராக அறிவிக்கப்பட்டு கீதா குமாரசிங்க நீக்கப்பட்ட பின்னர், அது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் பாதிப்பை ஏற்படுத்தாது என்று தேர்தல் அதிகாரிகள் முன்னர் வாதிட்டிருந்தனர். எனினும், பல சட்ட நிபுணர்கள் அந்தக் கருத்தில் இருந்து வேறுபடுகிறார்கள்.

தேர்தலுக்கு முன்னரோ பின்னரோ வேட்பாளர் ஒருவர் தகுதி நீக்கம் செய்யப்படும் போது, ஏனைய வேட்பாளர்களுக்கு நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது.

எனினும், ஆவணங்களை நிரப்பும் போது, தகுதியிழப்புச் செய்யப்படக் கூடாது. வேட்புமனுத் தாக்கலின் போது, வேட்பாளர் ஒருவர் தகுதியிழப்பு செய்யப்பட்டால், ஒட்டுமொத்த வேட்புமனுவையும் நிராகரிப்பதற்கு இட்டுச் செல்லும்.

நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 115 ஆவது பிரிவின்படி, வேட்புமனு தாக்கலின் போது, வேட்பாளர்களுக்கு விதிவிலக்கு கிடையாது. நாடாளுமன்றத் தேர்தல்களில் வேட்புமனுக்களை நிராகரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் கூறப்பட்டுள்ளன.

## ஒரு சட்டக் கண்ணோட்டம்



115 ஆவது பிரிவின் படி, தேர்தலுக்கு முன்னரோ பின்னரோ, வேட்பாளர் ஒருவர் மரணமானாலோ, போட்டியில் இருந்து விலகினாலோ, தகுதியிழப்பு செய்யப்பட்டாலோ, தேர்தல் செல்லுபடியற்றதாகாது. கட்சியினது அல்லது குழுவினது வேட்புமனுவைப் பாதிக்காது.

எவ்வாறாயினும் இது, சட்டபூர்வமாக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனு அடிப்படையிலானதேயாகும். எல்லா வேட்பாளர்களும், சிறிலங்கா குடிமக்களாக இருக்க வேண்டும், வேறு எந்த நாட்டிலும் குடியுரிமை கொண்டவர்களாக இருக்கக் கூடாது. அப்படியிருக்கும் போது, வேட்புமனுவை தகுதியிழப்புச் செய்ய முடியாது.

எனவே, தேர்தல் ஆணையம், 115 ஆவது பிரிவை கவசமாகப் பயன்படுத்த முடியாது, என்கிறார்கள் சட்ட நிபுணர்கள்.

ஏனென்றால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பட்டியலில் உள்ள ஏனைய வேட்பாளர்கள், 115 ஆவது பிரிவின் கீழ் நன்மையை அனுபவிப்பதற்கு, கீதா குமாரசிங்க சட்டபூர்வமான ஒரு வேட்பாளராக இருக்கவில்லை.

கீதா குமாரசிங்கவின் வேட்புமனுவை சரியான முறையில் சவாலுக்குட்படுத்திய போது, தேர்தல் ஆணையத்தின் பிரதிநிதியாகிய தெரிவத்தாட்சி அதிகாரி, தவறிழைத்து விட்டார். அதனால், காலி மாவட்ட வாக்காளர்களுக்கு மாத்திரமன்றி, ஒட்டுமொத்த நாட்டுக்குமே அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

115 ஆவது பிரிவு தொடர்பாக எந்தக் குறுகிய விளக்கமும், வெளிநாட்டவர்களை வேட்புமனுக்களில் உள்ளடக்கலாம், நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தி, கீதா குமாரசிங்கவைப் போல, இரண்டு ஆண்டுகளுக்குப்பின்னர்வெளியேற்றும் வகையில் நாடாளுமன்றத்திலும் அங்கம் வகிக்கலாம் என்ற நிலைக்கு இட்டுச் செல்லும்.

குமாரசிங்க வழக்கை 115 ஆவது பிரிவின் கீழ் அணுகக் கூடாது என்றும், இரண்டு நீதிமன்ற முடிவுகளின் அடிப்படையில், தேர்தல் ஆணையம் இதனைக் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும் சிறிலங்கா தேர்தல் கண் காணிப்பாளர்களும் வாதிட்டனர்.

ஒருவர் நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்படுவதால், மாவட்டத்தின் ஒட்டுமொத்த முடிவுகளையும் பாதிக்கும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்புமனு தகுதியிழப்புச் செய்யப்பட்டால், அந்தக் கட்சி ஆறு ஆசனங்களையும், தேசியப் பட்டியல் ஆசனம் ஒன்றையும் கூட இழக்கும் சாத்தியம் உள்ளது.

எந்தவொரு முன்னுதாரணமும் இல்லை என்பதால், காலி மாவட்டத்துக்கு இடைத் தேர்தல் நடத்த உத்தரவிடுமாறு கோரி, மனுதாரர்கள் நீதிமன்றத்தைக் கோரலாம்.

அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வாக்குகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, ஆசனங்களை மீள் ஒதுக்கீடு செய்யுமாறு கேட்கலாம்.

அது நாடாளுமன்றத்தில் ஜே.வி. பிக்கு மேலும் சில ஆசனங்களைப் பெற்றுக் கொடுக்கக் கூடும்.

காலி மாவட்ட முடிவுகளின் எந்த மாற்றமும், தேசியப் பட்டியலில் தாக்கத்தை ஏற்படுத்தும். அது, நாடாளுமன்றத்திலும் அதிகாரச் சமநிலையை மாற்றியமைக்கும்.

நாடாளுமன்றத்தில் ஐ.தே.கவுக்கு 106 ஆசனங்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 95 ஆசனங்களும், ஜே.வி.பிக்கு 6 ஆசனங்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 16 ஆசனங்களும், ஈ.பி.டி.பி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு தலா ஒரு ஆசனமும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. ★

# நாட்டின் நீதிமன்ற கட்டமைப்பில் எவருமே எதிர்பாராத மாற்றங்கள்!

கொழும்பு, நவ. 08

யாரும் எதிர்பார்க்காத மாற்றத்தை எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் நீதிமன்ற கட்டமைப்பில் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துவருகின்றேன்.

அத்துடன், சட்டமா அதிபர் திணைக்களத்தில் பெரியளவில் வழக்குகள் குவிந்திருக்கின்றன என நீதி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சட்டமா அதிபர் திணைக்களம், சட்டவாக்க திணைக்களம் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஆகியவற்றின் ஊடாக இடம்பெறும் சேவைகள் தொடர்பாக அதிகமானவர்கள் அறியாமல் இருக்கின்றனர்.

கடந்த 10வருடங்களாக இந்த நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களில் சேவை செய்துவரும் நீதிபதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு எந்த நன்மையும் கிடைத்ததில்லை.

அதனால், அவர்கள் மன திருப்தியுடன் பணியாற்றக் கூடிய சூழலை நாங்கள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

மேலும், சட்டமா அதிபர் திணைக்களத்தில் இன்று பெரியளவில் வழக்குகள் விசாரணைக்காக குவிந்து காணப்படுகின்றன. அதற்காக போதுமான சட்டத்தரணிகள் இந்த திணைக்களத்தில் இல்லாத நிலை காணப்படுகின்றது.



விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் நீதி அமைச்சர் தலதா

சுமார் 200 சட்டத்தரணிகளே இருக்கின்றனர். அதிகமானவர்கள் இவர்களின் சேவையை மதிப்பதில்லை. அத்துடன் பொலிஸாரும் தங்களால் தீர்க்கக்கூடிய பிரச்சினைகளையும் தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கின்றனர்.

சிறுவர்துஷ்பிரயோக, பெண்கள் வன்முறை வழக்குகளே அதிகம் காணப்படுகின்றன. இவற்றை முறையாக தீர்க்க வேண்டும். ஒரு இரவில் இந்த பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க முடியாது.

அத்துடன், வழக்குகள் தாமதமடைகின்றமை தொடர்பாக பெரியளவில் பேசப்பட்டு வருகின்றது. இதுதொடர்பாக பெரும் குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. இதற்காக மரண விசாரணை அதிகாரிகளின் ஒத்துழைப்பை எவ்வாறு பெற்றுக்கொள்வது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மன்னாரில் தேங்காய்க்கு பெரிய தட்டுப்பாடு!



மன்னார், நவ. 08

மன்னாரில் தேங்காய்க்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையினால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

நாட்டில் தோங்காய்க்கு பெரியதட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு, அதிக விலைக்கு தேங்காய் விற்பனை செய்யப்பட்டு வந்தது.

இந்த நிலையில் மன்னாரில் போதிய அளவு தேங்காய் காணப்பட்ட போதும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இந்த மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் தேங்காய்க்கு பெரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சில வர்த்தக நிலையங்களில் தேங்காய் ஒன்று 80 ரூபா முதல் 95 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதனால், தேங்காயைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவு மாவட்டத்தின் வறுமைநிலை குறைந்துள்ளது!

### - அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு -



முல்லைத்தீவு மாவட்டத்தின் வறுமை நிலை 24.5 சதவீதத்தில் இருந்து இன்று 12 சதவீதம் வரை குறைந்திருக்கிறது என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர் வாழ்வளிப்பு , மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டீ.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமாகாணத்தின் வறுமை நிலை தணிந்துள்ளது. மூன்று தசாப்தங்கள் நீடித்த யுத்தம் காரணமாக வடக்கின் வறுமை நிலை ஏனைய மாகாணங்களை விட அதிகமாக காணப்பட்டது.

கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டன.கடந்த 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சமகால அரசு ஆரம்பித்த நிலைபேறான அபிவிருத்தித் திட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## போத்தல்கள், கொள்கலன்களில் பெற்றோல் வழங்கப்படமாட்டா!

கொழும்பு, நவ. 08

போத்தல்கள், கொள்கலன்களில் பெற்றோல் வழங்கப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் நீண்ட வரிசை நிலவி வருகின்றது.

இதனை கவனத்தில் கொண்டு சுற்றறிக்கை ஒன்றை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின்கனியவள அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க வெளியிடவுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போத்தல்களிலும், கொள்கலன்களிலும் எரிபொருளைபெற்றுக்கொள்வதற்கு சிலர் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு பெறப்படும் எரிபொருள் கூடுதலான விலைக்கு விற்பனை செய்யப்படுவதால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப் படவுள்ளது.

நேற்றைய தினம் 2 ஆயிரத்து 400 மெற்றிக்தொன் பெற்றோலை விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிந்தது.

கடந்தசில தினங்களாக எரிபொருளில் ஏற்பட்ட தட்டுப்பாடு தொடர்பில்



பெற்றோலிய கூட்டுத் தாபனம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நாளாந்த தேவைக்கேற்ற பெற்றோலை விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் கடந்த சில தினங்களாக தட்டுப்பாட்டை குறைப்பதற்காக நாம் மேற்கொண்ட நடவடிக்கையில் குறிப்பிட்ட இலக்கு அடையப்படவில்லை.

இதற்குக் காரணம் வெளிநபர்கள் வாகனங்களிற்கு மேலதி கமாக வேறு பொருள்கள், கொள்கலன்கள் போன்ற வற்றில் பெற்றோலை பெற்றுக்கொள்வதை காண முடிந்தது.

நாம் விநியோகித்த பெற்றோல் வாகனங்களுக்கு அன்றி வேறு நபர்கள் வர்த்தகத்திற்காக பயன்படுத்தியதை காண முடிந்தது.

நாம் மேற்கொண்ட நடவடிக்கையின் மூலம் இவ்வாறான குழுவினர் பெற்றோலை பெற்று எரிபொருள் நிலையத்திற்கு அப்பால், ஒரு லீற்றர் பெற்றோலை 150 ரூபாவிற்கு விற்பனை செய்தமை கண்டறியப்பட்டது.

இதனாலேயே அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# பிறந்தநாளில் 'மய்யம் விசில்' செயலியை வெளியிட்ட கமல்



பிறந்தநாளில் செய்தியாளர்களைச் சந்தித்த கமலஹாசன், நியாயத்திற்காகக் குரல் எழுப்பும் புதிய செயலி ஒன்றை அறிமுகம் செய்திருக்கின்றார்.

சமீப காலமாகவே தனது அரசியல் பிரவேசம் குறித்து வெளிப்படையாகப் பேசி வரும் கமலஹாசன் விரைவில் கட்சி தொடர்பான அறிவிப்பை வெளி யிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதுவும் அவரது பிறந்தநாள் அன்று அவரது கட்சி அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கமலஹாசன் அதனை மறுத்திருந்தார். இந்த நிலையில், புதிய செயலி(apps) ஒன்றை வெளியிட உள்ளார் எனக் கூறப்பட்டது.

இந்த நிலையில், நற்பணி மன்றம் சார்பில் ஏற்பாடு செய்திருந்த இலவச மருத்துவ முகாமை தொடங்கி வைத்த கமலஹாசன் பின்னர் சென்னை தியாகராய நகரில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசினார். அதில் அவர் பேசியவை வருமாறு:-


நல்லது செய்வதையும் பண்பறிந்து வெகு ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். அதேநேரத்தில் நல்லது செய்தால் மட்டும் போதாது, அதைச் சரியாக, சரியான மக்களுக்குச் செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. நல்லதைச் சரியாகச் செய்தால் தான் அது அரசியல். அந்த வகையில் தானத்தை தவறான ஆள்களிடம் கொடுப்பது கூட ஒரு தவறுதான்.

தமிழகத்தை இயக்க வேண்டிய சக்கரங்கள் பழுதடைந்துள்ளன. பழுதை சரிசெய்ய மக்கள் ஒன்று திரள வேண்டும். மக்கள் பிரச்சினைகள் பற்றி அறிய விரைவில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறேன். அரசியல் பயணத்திற்கு நிறைய முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல் அத்திபாரத்தை வலுவாக அமைக்க வேண்டிய பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

நான் அரசியல் பொறுப்புக்கு வந்தால், என்னை நோக்கியும் கேள்விகள் எழுப்பப்படலாம். நான் தற்போது நியாயத்திற்காக குரல் எழுப்பும் செயலி ஒன்றை அறிமுகம் செய்கிறேன். அதற்கு ''மய்யம் விசில்'' என்று பெயர் வைத்துள்ளேன் எனக் கூறிய கமல், மக்கள் பிரச்சினைகள், மக்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயத்திற்காக இந்தச் செயலியை பயன்படுத்துமாறு கோரியுள்ளார்.

(ப)

# இராணுவ அமைச்சரின் அருணாச்சல பயணத்துக்கு சீனா கடும் எதிர்ப்பு



இராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமன் அருணாச்சல பிரதேச பயணத்திற்குச் சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமன் இரண்டு நாள்கள் பயணமாக அருணாச்சல பிரதேசத்துக்கு நேற்று முன்தினம் சென்றார். இந்தியா-சீனா எல்லை கட்டுப்பாட்டுக் கோடு அருகே அஞ்சா மாவட்டம் கபிது என்ற பகுதியில் உள்ள இந்திய இராணுவ நிலைகளுக்கு சென்று, இராணுவ வீரர்களுடன் உரையாடினார். அவர் களது அர்ப்பணிப்பு உணர்வைப் பாராட்டினார்.

இதற்கிடையே, அருணாச்சலப் பிரதேசத்தை சீனா தெற்கு திபெத் எனக்கூறி உரிமை கொண்டாடிவருகிறது. ஆனால், அருணாச்சலப் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதிதான் என்று இந்தியா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. இந்தியாவின் கருத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாத சீனா, தொடர்ந்து அருணாச்சலப் பிரதேசத்திற்கு முக்கிய தலைவர்கள் செல்லும் போது எதிர்ப்புத் தெரிவிப்பதை வாடிக்கையாகக் கொண்டுள்ளது.

இந்த நிலையில், இராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமனின் அருணாச்சலப் பிரதேச பயணத்திற்குச் சீனா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, சீனவெளியுறவுத்துறைச் செய்தித் தொடர்பாளர் ஹுவா சான்யிங் கூறுகையில், சீனா - இந்தியா எல்லையில் கிழக்கு செக்டாரில் பிரச்சினை உள்ளது. பிரச்சினைக்குரிய இந்தப் பகுதிக்கு இந்தியத் தரப்பில் இருந்து பயணம் மேற்கொள்ளப்பட்டது அமைதிக்கு உகந்தது கிடையாது. எல்லையில் அமைதியை பராமரிக்க இந்தியாவும் சீனாவும் இணைந்து பணியாற்ற வேண்டும்எனத்தெரிவித்துள்ளார்.

# கமலை அரசியலுக்கு வரவேற்கிறேன்



விஜயகாந்த் பேட்டி

கமல் அரசியலுக்கு வருகின்றமையை வரவேற்கிறேன் என்று தே.மு.தி.க. தலைவர்விஜயகாந்த்நிருபர்களிடம் அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

பள்ளிக்கரணை அருகே உள்ள நாராயணபுரம் ஏரி தொடர்மழையால் நிரம்பி வழி கிறது. ஏரியில் இருந்து வெளியேறும் தண்ணீர் அருகில் உள்ள குடியிருப்புகளுக்குள் புகுந்துள்ளது.

இந்த நிலையில் நாராயணபுரம் ஏரியை தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அவருடன் மனைவி பிரேமலதா மற்றும் கட்சி நிர்வாகிகளும் இருந்தனர்.

பின்னர் விஜயகாந்த் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

கமல், புதிய கட்சி தொடங்கினால் வரவேற்பேன். அவர் கட்சி தொடங்கி கிளை கழகங்கள் ஆரம்பிக்கட்டும். அதன் பின்னர் கூட்டணி எல்லாம் பற்றி பேசிக்கொள்ளலாம். யார் கட்சி தொடங்கினாலும் வரவேற்கிறேன். திரைப்படத்துறைக்கு கமல் என்ன செய்தார் என்று அவரிடம் தான் கேட்க வேண்டும். அரசால் நிதிகள் மக்களுக்கு ஒதுக்கப்படவில்லை. அரசியல் வாதிகளுக்குத்தான் ஒதுக்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

# லொறி – ஜீப் மோதி விபத்து; 13 பேர் பரிதாபமாக சாவு!



குஜராத் மாநிலத்தில் நேற்று அதிகாலை லொறி மீது ஜீப் மோதிய பயங்கர விபத்தில் 13 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

குஜராத் மாநிலம் அகமதாபாத்-இந்தூர் நெடுஞ்சாலையில் நேற்று அதிகாலை 3 மணியளவில் ஜீப் மீது சரக்கு லொறி மோதி விபத்துக்குள்ளாகியது.

அகமதாபாத்திலிருந்து மத்தியப்பிரதேசம் மாநிலத்தில் உள்ள தங்கள் சொந்த ஊரான அலிரொஜ்பூர் மாவட்டத்திற்கு சுமார் 25 பேர் ஜீப்பில் சென்று கொண்டிருந்தனர். அப்போது முன்னால் சென்று கொண்டிருந்த லொறி மீது ஜீப் மோதியது. இதில் ஜீப்பில் பயணம் செய்த 6 பெண்கள் உட்பட 12 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 9 பேர் படுகாயமடைந்தனர். அவர்களை அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அவர்களில் ஒரு குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

இந்த விபத்து கேதா மாவட்டம் காத்லால் நகருக்கு அருகில் நிகழ்ந்துள்ளது. இரவு நேரம் என்பதால் ஓட்டுநர் தூக்கத்தில் லொறி மீது மோதியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இது தொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

(ப)

# தினகரன் தலைமையில் அ.தி.மு.க. இணையும்



நாஞ்சில் சம்பத்

போளூர், நவ.08

அ.தி.மு.க. இரு அணிகளும் விரைவில் இணையும் அதற்கு டி.டி.வி. தினகரன் தலைமை வகிப்பார் என நாஞ்சில் சம்பத் கூறினார்.

போளூரில் அ.தி.மு.க. அம்மா அணியின் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட செயல்வீரர் கூட்டம் நடந்தது. ஜெயலலிதா பேரவை மாவட்ட செயலாளர் பாபு முன்னிலை வகித்தார்.

அதில் கொள்கை பரப்புத் துணைச் செயலாளர் நாஞ்சில் சம்பத் பங்கேற்றார்.

தமிழகத்திற்கு வந்த பிரதமர் மோடி இந்தியாவின் மூத்த அரசியல் தலைவர் கலைஞரை சந்தித்தமையால் அரசியல் மாற்றம் ஏற்படுமா என்ற பதிலுக்கு நாங்கள் பதில் சொல்லத் தேவையில்லை.

நடிகர் கமலுக்கு அறிவும் அறிமுகமும் உள்ளன. கட்சி ஆரம்பிக்கவும் முதல்வராக வருவதற்கு அனைத்துத் தகுதியும் உள்ளது. ஆனால் மக்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.

சென்னையில் பருவ மழைக்கு இருசிறுமிகள் பலியானதற்கு அமைச்சர்கள் ராஜினாமா செய்து இருக்க வேண்டும்.

அ.தி.மு.க. அம்மா அணியில் அனைத்துப் பொறுப்புக்கும் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அ.தி.மு.க. இரு அணிகளும் விரைவில் இணையும் அதற்கு டி.டி.வி. தினகரன் தலைமை வகிப்பார் என்று தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# பனாமாவைத் தொடர்ந்து பரடைஸ் ஆவணங்கள்




சர்ச்சையில் பாக். முன்னாள் பிரதமர்

'பரடைஸ்பேப்பர்ஸ்' ஆவணங்களின் பட்டியலில் 2004-2007 ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தானில் பிரதமராக இருந்த சவுக்கத் அஜிஸ் பெயர் இடம் பெற்றுள்ளது எனத் தகவல்கள் கூறுகின்றன.

வெளிநாடுகளில் உள்ள வரிச்சலுகையைப் பயன்படுத்தி பிரபலங்கள் பலரும், வெளிநாடுகளில் முதலீடு செய்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக சர்வதேசப் புலனாய்வுப் பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு, 95 ஊடகப் பங்குதாரர்கள் 'பரடைஸ் பேப்பர்ஸ்' என்ற பெயரில் ஆவணங்களை வெளியிட்டுள்ளனர். இதில் உலகத் தலைவர்கள், தொழில் அதிபர்கள், கம்பனிகள் என 31 ஆயிரம் பேரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

இந்தப் பட்டியலில் 2004-2007 ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தானில் பிரதமராக இருந்த சவுக்கத் அஜிஸ் பெயர்இடம் பெற்றுள்ளது. இவர், தனது மனைவி, குழந்தைகள், பேரக்குழந்தை ஆகியோரின் பெயரில் அமெரிக்காவில் டெலாவரே மாகாணத்தில் அந்நாட்டிக் அறக்கட்டளை நிறுவி, அதன் வாயிலாக முதலீடுகள் செய்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் தனியார் சொத்துக்களும் இந்த 'பரடைஸ் பேப்பர்ஸ்' ஆவணங்களில் இடம் பெற்றுள்ளன எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்தத் தனியார் எஸ்டேட் சார்பில் பல லட்சம் பவுண்கள், வெளிநாடுகளில் உள்ள வரிச்சலுகையைப் பயன்படுத்தி முதலீடு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

(ப)

## கட்டலோனியா தலைவர் பெல்ஜியத்தில் விடுவிப்பு



பிரஸல்ஸ்,நவ.08

தப்பி ஓடிய கட்டலோனியாத் தலைவர் கார்லஸ் பூஜ்யமோன்ட் மற்றும் 4 முன்னாள் அமைச்சர்களை பெல்ஜியம் நீதிமன்றம் விடுவிக்க உத்தரவிட்டுள்ளது.

ஸ்பெயினில் தன்னாட்சி அதிகாரம் பெற்ற கட்டலோனியா மாகாணம் சுதந்திரம் கேட்டு மக்களிடம் பொதுவாக்கெடுப்பு நடத்தியது. அதில் வெற்றி பெற்றது என அறிவித்து தனிநாடு என அறிவிக்கப்பட்டது. அதை ஏற்காத ஸ்பெயின் பிரதமர் மரியானோ ராஜேஸ் கட்டலோனியா நாடாளுமன்றத்தைக் கலைத்து அதை ஸ்பெயினின் நேரடி மேற்பார்வையில் கொண்டு வந்தார்.

அதைத்தொடர்ந்து கட்டலோனியாத் தலைவர் கார்லஸ் பூஜ்யமோன்ட் மற்றும் 4 முன்னாள் அமைச்சர்கள் பெல்ஜியத்திற்குத் தப்பி ஓடிவிட்டனர். எனவே அவர்களை கொண்டுவர ஐரோப்பிய யூனியன் பிடியாணை பிறப்பித்தது.

இதை விசாரித்த பெல்ஜியம் நீதிமன்றம் கட்டலோனியாத் தலைவர் கார்லஸ் பூஜ்யமோன்ட் மற்றும் 4 முன்னாள் அமைச்சர்களை பிணையில் விடுவித்தது. மேலும் அமைச்சர்களை உடனடியாக ஸ்பெயினுக்கு அனுப்ப வேண்டியதில்லை என்றும், 15 நாள்களில் பெல்ஜியம் நீதிமன்றத்தில் ஆஜராகவும் உத்தரவிட்டுள்ளது.

## ஒரு பீட்சா விலை 77 லட்சம்.

இத்தாலியில் பிரபலமான சமையல் கலைஞர்கள் இணைந்து உலகிலேயே அதிக விலையுயர்ந்த பீட்சா ஒன்றைத் தயாரித்துள்ளனர். இந்த பீட்சாவுடன் விலையுயர்ந்த மதுபானமான ரெமி மார்ட்டின் பரிமாறப்படுகிறது.

இதனால் இதன் விலை 77 லட்சமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சுமார் 72 மணிநேரம் வைத்து இந்தப் பீட்சா பதப்படுத்தப்படும் என அதனை தயாரித்த சமையல் குழுவில் ஒருவரான ரெனோ டோவயோலா தெரிவித்துள்ளார். சமீபத்தில் தனியார் உணவு ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று வெளியிட்ட உணவுப் பட்டியலில் 'லூயிஸ்13' பீட்சா தான் உலகின் விலையுயர்ந்த பீட்சா என்னும் பெருமையை பெற்றுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது.

## வடகொரிய ஏவுகணையை ஜப்பான் விரட்டியடிக்கும்



ஜப்பானில் ட்ரம்ப் பேச்சு

ரோக்கியோ,நவ.08

வடகொரியாவின் ஏவுகணைகளை அமெரிக்க ஆயுதங்கள்மூலம் வானத்தை விட்டு ஜப்பான் விரட்டி அடிக்கும் எனமுதன்முறையாக ஜப்பான் சென்றுள்ள அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பேசியுள்ளார்.

அமெரிக்காவின் அதிபராக பொறுப்பேற்ற பின்னர் கிழக்காசிய நாடுகளுக்கு முதன் முறையாக டொனால்ட் ட்ரம்ப் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். ஜப்பான், தென்கொரியா, சீனா ஆகிய நாடுகளுக்குச் செல்லும் அவர் வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸில் நடைபெறவுள்ள ஆசிய ஒத்துழைப்பு உச்சிமாநாடுகளில் பங்கேற்கிறார்.

தனது பயணத்தில் முதல் நாடாக ஜப்பான் சென்றுள்ள ட்ரம்ப் அந்நாட்டின் பிரதமர் ஷின்சோ அபே உடன் பேச்சு நடத்தினார். பேச்சின்போது வடகொரியாவின் ஏவுகணை அச்சுறுத்தல் தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பேச்சுவார்த்தை முடிந்த பின்னர் ட்ரம்ப் - அபே இருவரும் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது பேசிய ட்ரம்ப், 'அமெரிக்காவிடமிருந்து வாங்கப்பட்ட ஆயுதங்கள் மூலம் வடகொரியாவின் ஏவுகணைகளை ஜப்பான் வானத்தை விட்டு வெளியே விரட்டியடிக்கும்.' எனக் குறிப்பிட்டார். மேலும், ஜப்பான் மற்றும் தென்கொரியா அதிகளவிலான நவீன ஆயுதங்களை வாங்குவதற்கு அனுமதி அளித்துள்ளேன் என தனதுட்விட்டர்பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இரண்டு முறை ஜப்பான் பகுதிகளுக்கு மேலாக தனது ஏவுகணைகளை வடகொரியா சோதித்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெ. துப்பாக்கிக் கலாசாரம்: 10 மாதங்களில் 13 ஆயிரம் சாவுகள்



வொஷிங்டன்,நவ.08

அமெரிக்காவின் பல்வேறு இடங்களில் கடந்த 10மாதங்களில்நடந்துள்ள சிறிய, பெரிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 13ஆயிரத்து 149 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வானுயர்ந்த கட்டடங்கள், மேம்பட்ட கலாசாரம், வலிமையான இராணுவம் என அமெரிக்கா மீது உலகம் வைக்கும் பார்வை எப்போதுமே உயரமானதுதான். இருப்பினும், அங்கு அடிக்கடி நடைபெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அமெரிக்கா மீதான பார்வையில் பயத்தை ஏற்படுத்துகின்றது.

நாகரிகத்தில் மேம்பட்டு இருந்தாலும் எதற்காக இப்படிச் சிலர் துப்பாக்கிகளைக் கொண்டு அப்பாவிகளைக் கொன்று வருகின்றனர்? என்ற கேள்வி எழாமல் இல்லை. டெக்ஸாஸ் மாகாணத்தில் உள்ள சுதர்லாண்ட் என்ற பகுதியில் உள்ள தேவாலயத்தில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதலில் 26பேர்கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில் இந்த ஆண்டில் மட்டும் சுமார் 52ஆயிரத்து 385 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இதில் 13ஆயிரத்து 149 பேர் தங்களது உயிர்களை இழந்துள்ளனர். இதில், 307 சம்பவங்கள் பெரியது என குறிப்பிடப்பட்டுள்ளன.

தீவிரவாதத்தை விட அமெரிக்காவுக்குப் பெரிய தலைவலியை கொடுப்பது உள்நாட்டில் மக்களோடு மக்களாக கலந்திருக்கும் துப்பாக்கிகள் தான். 2014 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் 103 பேர் கொல்லப்பட்டுள்ளனர். துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களைக் கணக்கிட்டால் இது வெறும் ஒரு விகிதம் தான்.

இவ்வளவு பேர் மாய்ந்தாலும், துப்பாக்கிகளால் பிரச்சினை இல்லை அதனைக் கையாளும் மன நிலை பாதிக்கப்பட்டவர்களால் தான் பிரச்சினை என பேசியிருக்கிறார் அதிபர் ட்ரம்ப்.

அமெரிக்கர்கள் தங்களது பாதுகாப்புக்கு துப்பாக்கிகள் வைத்துக்கொள்ளலாம் என்கிறது அங்குள்ளசட்டம். துப்பாக்கிக் கலாசாரம் எனும் வார்த்தையை உலகிற்குநல்கிய அமெரிக்காவில் யார் வேண்டுமானாலும் துப்பாக்கி வைத்திருக்கலாம் என்ற நிலை இருக்கும் வரை இந்த ஆயுதப் பசிக்கு முடிவு என்பது இல்லை.



# குசல் மென்டிஸ் நீக்கம் நியாயப்படுத்தும் லெப்ரோய்

இந்த மாதம் பிற்பகுதியில் ஆரம்பமாகவுள்ள இந்தியாவுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இருந்து முன் வரிசைத் துடுப்பாட்ட வீரர் குசல் மென் டிஸ் நீக்கப்பட்டமையை இலங்கைத் தேர்வுக் குழுத் தலைவர் கிரேம் லெப்ரோய் நியாயப்படுத்தியுள்ளார்.

நாட்டின் நம்பிக்கை தரும் எதிர்பார்ப்பாக உள்ள 22 வயது குசல் மென்டிஸ் நீக்கப்பட்டிருக்கின்றமை ரசிகர்கள் அனைவரதும் அவதானத்தைப் பெற்றுள்ளது. இந்த ஆண்டு ஆரம்பத்திலும் அவர் இதேபோன்று போட்டி களில் பிரகாசிக்கத் தவறிய போது அப்போது தலைமை பயிற்சியாளராக இருந்த கிரஹாம் போர்ட் அவரை அணியில் இருந்து வெளியேற்றாமல் தக்கவைத்துக் கொள்ள ஆதரவாக இருந்தார். எவ்வாறாயினும் இளம் துடுப்பாட்ட வீரர் நீக்கப்படுவதற்கு தூண்டிய காரணிகள் பற்றி லெப்ரோய் குறிப்பிட்டுள்ளார்.

அவரைப் பாதாளத்துக்குத் தள்ளவோ அல்லது இந்தியாவுக்கு அழைத்துச் சென்று ஆசனத்தில் அமர வைக்கவோ எமக்கு விருப்பம் இல்லை. உண்மையில் அவரைச் சில உள்நாட்டுப் போட்டிகளில் விளையாடச் செய்து, தனது பாணியில் ஆடி மீண்டும் மனஉறுதியைப் பெறச் செய்யவே நாம் முயன்று வருகிறோம் என்று லெப்ரோய் தெரிவித்துள்ளார்.

அவர் ஒரு நம்பிக்கை கொண்ட வீரர். அவரைப் பொறுத்தவரை நம்பிக்கைதான் அனைத்துமே. அவரை மேலும் இன்னிங்ஸ்களில் ஆடவைத்து மென்மேலும் குறைந்த ஓட்டங்கள் பெற்று அதன் பின் அவர் நீக்கப்பட்டு அவரது நம்பிக்கையை மேலும் சிதறடிக்கும் நிலையை உருவாக்க நாம் விரும்பவில்லை. அவருக்குத் தன்வசம் போதுமான வயது இருக்கும்போது தம்மைக் கிரிக்கெட்டில் சிறந்தொரு வீரராக வருவதற்கு அவரைத் தொடர்ந்து பயணிக்கச் செய்யவே நாம் விரும்புகிறோம். அவர் மேலும் 10 ஆண்டுகள் விளையாட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம் என்றும் லெப்ரோய் குறிப்பிட்டார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கௌஷால் சில்வா அணிக்கு தேவையான அனைத்து தகைமைகளும் கொண்டவருக்கான உதாரணமாக இருக்கின்றார் பயிற்சியாளர் நிக் போத்தாஸ் குறிப்பிட்டிருக்கும் நிலையில் அவரும் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த மாதம் பாகிஸ்தானுக்கு எதி ரான டெஸ்ட் தொடரில் இலங்கை அணி 2:0 என வெற்றி பெற்ற நிலை யில், அந்தத் தொடரில் நான்கு இன்னிங்ஸ்களிலும் சில்வாவின் அதிகூடிய ஓட்டங்கள் 27 மாத்திரமாகும். எனினும் இந்தியாவுக்கு எதிரான இலங்கை அணியின் திட்டத்தில் சில்வா இருக்கின்றமையை அனைவரும் நம்பி இருந்தனர் என, போத்தாஸ் அவருக்கு ஆதரவாகக் குறிப்பிட்டுள்ளார்.

நிக்கின் அதே கருத்துடன் நாமும் ஒத்து நிற்கிறோம். ஆனால் கடைசியில் ஓட்டங்களைப் பெற்றிருக்க வேண்டும். ஆளுமை, செயற்பாடுகள், அணியின் ஆட்ட உணர்வு அனைத்துமே அவரிடம் உள்ளன, ஆனால் துடுப்பாட்டத்திலும் அவரிடம் நாம் மேலும் எதிர்பார்க்கிறோம் என்று லெப்ரோய் விளக்கினார்.

சில்வா இல்லாத நிலையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரருக்கான இடம் காலியாக உள்ளது. மெண்டிஸின் 19 வயதுக்கு உட்பட்ட அணியின் சக வீரர் சதீர சமரவிக்ரம அந்த இடத்தை நிரப்பப் பொருத்தமானவர் என்று லெப்ரோய் குறிப்பிட்டார். சதீர எதிர்காலத்தில் நம்பிக்கை தரும் வீரராக உள்ளார். அவரை அணிக்குள் கொண்டுவர இதுவே சரியான நேரமாகும். தற்போது அவர் உலகின் முதல் நிலை அணிக்கு எதிரான சவாலுக்கு முகங்கொடுக்கும் நேரமாகும். மோசமான பந்துகளுக்கு அடித்தாடி பந்துவீச்சாளர்களுக்கு அவர் அழுத்தம் கொடுப்பார். அவரது ஆட்டம் (எம்மை) அதிகம் கவர்ந்துள்ளது என்று லெப்ரோய் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவுடனான முதலாவது டெஸ்ட் போட்டியின்போது கையில் காயத்திற்கு உள்ளான மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர் அசேல குணரத்ன காயத்தில் இருந்து முழுமையாக மீண்டிருக்கும் நிலையில் எதிர்வரும் தொடரில் அவதானத்திற்கு உள்ளாகியுள்ளார். அசேல உடற்தகுதியுடன் உள்ளார். அது மருத்துவ அடிப்படையிலும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. எனினும், அது தொடக்கம் அவர் மூன்றரை மாதங்களாக எந்த ஒரு கிரிக்கெட் போட்டியிலும் பங்கேற்கவில்லை. உலகின் சிறந்த அணியுடன் ஆடும் போதும் ஆட்ட திறனில் உச்சத்தில் இருக்கும் வீரர்களே தேவையாக உள்ளனர். அனைத்தும் சரியாக இடம்பெற்றால் அவர் ஒருநாள் போட்டிகளுக்குத் திரும்புவார் என்று விளக்கினார் லெப்ரோய்.

# டோனியில் சந்தேகம் இல்லை

டோனியின் ஆட்டத்தில் யாருக்கும் சந்தேகம் இல்லை என்று இந்தியக் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர்குமார் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர்குமார் திருவனந்தபுரத்தில் அளித்த பேட்டியில், 'பும்ரா பந்து வீசும் முறை வித்தியாசமாக இருக்கும். இதனைப் புரிந்து கொள்வதில் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சிரமம் ஏற்படும். அவர் தனது பந்து வீச்சில் நிறைய முன்னேற்றம் கண்டுள்ளார். யோர்க்கர் பந்து வீசுவதிலும் நல்ல ஏற்றம் கண்டு இருக்கின்றார். பும்ராவுடன் பந்து வீசுகின்றமை நம்பிக்கையை அளிக்கக் கூடியதாகும்.

போட்டி தொடங்கியதும் நாங்கள் ஆடுகளத்தின் தன்மை குறித்துக் கருத்துப் பரிமாறிக் கொள்வோம். எந்த மாதிரியான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது என்பது தொடர்பாக ஆலோசிப்பதால் இருவருக்கும் நல்ல பலன் கிடைக்கின்றது. ராஜ்கோட்டில் நடந்த ஆட்டத்தில் இந்திய அணி கண்ட தோல்விக்குப் பந்து வீச்சாளர்களைக் குற்றம் சாட்டக்கூடாது.

நியூசிலாந்து அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றது. காலின் முன்ரோ எங்களுக்கு சிரமம் கொடுத்து வருகின்றார். அந்த அணியில் கனே வில்லியம்சன், மார்ட்டின் கப்தில் ஆகிய சிறந்த துடுப்பாட்ட வீரர்களும் உள்ளனர். டோனியின் ஆட்டத்தில் யாருக்கும் சந்தேகம் இல்லை. அவர் ஒரு ஜாம்பவான். அவருக்கு என்ன செய்ய வேண்டும் என்பது தெரியும்' என்றும் தெரிவித்தார்.


புவனேஷ்வர்குமார்

# கைல் ஹோப் நீக்கம் அம்ப்ரிஸ் சேர்ப்பு


நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான மேற்கிந்தியத்தீவுகள் அணியில் இருந்து கைல் ஹோப் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக அம்ப்ரிஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியத்தீவின் டெஸ்ட் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. அதன்பின் ஸிம்பாப்வேக்கு எதிராக இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இந்த இரண்டு தொடரிலும் மேற்கிந்தியத்தீவு அணியில் கைல் ஹோப் இடம்பிடித்திருந்தார்.

5 டெஸ்ட் போட்டிகளிலும் கைல் ஹோப்பின் ஆட்டம் மிகவும் மோசமாக இருந்தது. இதனால் நியூசிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான அணியில் இருந்து கைல் ஹோப் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக சுனில் அம்ப்ரிஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

24 வயதாகும் சுனில் அம்ப்ரிஸ் ஒரேயொரு ஒருநாள் போட்டியில் மட்டுமே விளையாடியுள்ளார். 38 முதல் தரப் போட்டிகளில் 5 சதத்துடன் ஆயிரத்து 900 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார்.

இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் டிசெம்பர் முதலாம் திகதி தொடங்குகின்றது. 2ஆவது டெஸ்ட் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதன் பின் மூன்று ஒரு நாள் மற்றும் ரி-20 போட்டிகள் கொண்ட தொடர் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சதுரங்கப் போட்டிகள்



இலங்கைச் சதுரங்கச் சம்மேளனத்தின் 2017/2018 ஆம் ஆண்டிற்கான தெரிவுப் போட்டிகள் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறுவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது

போட்டிகள் இருதினங்களிலும் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். போட்டிக்கான விண்ணபப்பபடிவங்களை போட்டி இணைப்பாளர் த.அருணகிரிநாதனுடன் (ஆங்கில போதனாசிரியர் யாழ். பல்கலைக்கழகம்) தொடர்புகொண்டு அல்லது யாழ். இந்துக் கல்லூரியில் பிற்பகல் 3 மணிமுதல் மாலை 6 மணிவரை இயங்கும் தற்காலிக அலுவலகத்தில் பெற்றுப் போட்டிக்கான கட்டணத்துடன் ஒப்படைக்க வேண்டும்.

போட்டி ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக 7 வயது, 9 வயது, 11 வயது, 13 வயது, 15 வயது, 17 வயது ஆகிய பிரிவுகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போட்டியாளர்கள் தமக்குரிய விளையாட்டு உபகரணங்களைக்கொண்டுவரவேண்டும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆஷஸ் தொடர்: துணைத் தலைவராக அண்டர்சன்



ஆஷஸ் தொடருக்கான இங்கிலாந்து அணித் துணைத் தலைவராக வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் கிரிக்கெட் தொடர் வருகிற 23ஆம் திகதி பிரிஸ்பேனில் தொடங்குகின்றது.

இந்தத் தொடருக்கான இங்கிலாந்து அணியில் துணைத் தலைவராக பென் ஸ்டோக்ஸ் இடம்பிடித்திருந்தார். மேற்கிந்தியத் தொடரின் போது பென் ஸ்டோக்ஸ் நைட் கிளப்பிற்கு வெளியே வைத்து வாலிபர் ஒருவரைத் தாக்கினார் என்ற சம்பவத்தில் பொலிஸார் கைது செய்து பின்னர் விடுதலை செய்தனர்.

இந்த விவகாரம் தொடர்பாக பொலிஸ் விசாரணை நடைபெற்றதால் பென்ஸ்டோக்ஸ் ஆஷஸ் தொடரில் இருந்து நீக்கப்பட்டார்.

இதனால் இங்கிலாந்து அணிக்குத் துணைத் தலைவர் இல்லாமல் இருந்தது. இந்த நிலையில் தற்போது வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

# உதைபந்தாட்டத்தை வலுவூட்ட நடவடிக்கை

இலங்கையின் உதைபந்தாட்ட விளையாட்டை வலுவூட்டும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் தெரிவித்துள்ளது.

புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலங்கையில் உதைபந்தாட்டத் துறையைச் சர்வதேச மட்டத்திற்குக் கொண்டுவருவது தமது நோக்கம் என்று சம்மேளனத்தின் தலைவர் அனுர டீ சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்காக வெளிநாட்டுப் பயிற்றுவிப்பாளர்களின் சேவையைப் பெறுவது பற்றியும் கவனம் செலுத்தியுள்ளோம் எனவும் விரைவில் பயிற்சிக்குழாமை ஸ்தாபிக்கவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அம்பரலவ்ா



குடும்பம் - Anacardiaceae
தாவரவியற் பெயர்-Spondiasduicis
பொதுப்பெயர் - Golden apple, அம்பரல்லா

வெவ்வேறான நாடுகளிலும் வெவ்வேறான பெயர்களால் அழைக்கப்படும் அம்பரல்லா ஆனது நன்கு நீர் வடிப்புள்ள 80% - 100% சூரிய ஒளியில் எல்லா மண்வகை உள்ள நிலங்களிலும் வளரக்கூடியதன்மை கொண்டது. இதனைGolden apple, June plum எனவும் அழைக்கப்படுகிறது. இயற்கையான அதாவது சாதாரண மண்PH லும் (5.5 – 6.5) 22°C – 27°C வெப்பநிலையிலும் வளரும் தன்மை கொண்டது. இதில் காணப்படும் நார்த்தன்மையும் தசைப் பகுதியும் அன்னாசி, மாங்காயின் சுவையை ஒத்ததாகக் காணப்படுகின்றது. இத்தாவரத்தின் காய் மற்றும் இலைகள் பொதுவாக உண்ணப்படும் பகுதியாக காணப்படுகின்றது. முற்றிய காயில் அதிகளவான விற்றமின் C காணப்படுகின்றது நீரிழிவு நோயாளர்களுக்கு சீனித் தன்மையைக் குறைக்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. தாவரத்தின் குருத்துப் பகுதி இலைகளே உண்ணப்படுகின்றன. குருத்து இலைகளை சம்பல் செய்தும் காய்களை கறிசமைத்தும் உண்ணலாம்.

பொதுவாகத் தாவரம்12m-15m வரை உயரமாகவளரும். சிறிய வெள்ளை நிறப் பூக்களைக் கொண்டது. ஆண்பூ பெண்பூ என்பன சேர்ந்து ஒன்றாகக் காணப்படும். இத் தாவரத்தில் இருந்து பொதுவாக 4-5 வருடங்கள் வரைஅறுவடையைப் பெறலாம். பொதுவாக விதை மூலமாகவே இனப் பெருக்கமடையக் கூடியது. நான்கு வருடமுடைய தாய்த் தாவரத்திலிருந்தே விதைகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

100g அம்பரல்லங்காயில் 157 கலோரி சக்தியும் 15.5g காபோவைதரேற்றும் 8g சீனியும் 1g புரதமும் 1% விற்றமின் A யும் 85% விற்றமின் C யும் 2% கல்சியமும் 2% அயனும் உள்ளடக்கப்படுகிறது. இதில் கொலஸ்ரோல் அற்றது .இதன் தாய் நாடு மிலனேசியா ஆகும்.

**இதன் நன்மைகள்**

* இதயம் தொடாபான நோய்களை தடுக்கும்.
* கண்களின் பாதுகாப்புக்கு உதவும்.
* கொலஸ்ரோல் மட்டத்தை கட்டுப்படுத்தும்.
* Antioxidente கொண்டது.
* குருதியிலுள்ள செங்குருதி சிறு துணிக்கையின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.
* உடலிலுள்ள இழையங்களைப் பாதுகாக்கும்.
* காயிலுள்ள பொஸ்பரஸ் எலும்புகளையும் பற்களையும் பாதுகாக்கும்.

இத்தகைய சிறப்பு மிக்க மரத்தை வீடுகளில் நடுகைசெய்து அனைவரும் பயன்பெறுவோம்

ஆக்கம்
**செல்வி சிவகுமாரன் .பிந்துஜா**
ஒலுமடுவிவசாயப் போதனாசிரியா,
பிரதிமாகாணவிவசாயப் பணிப்பாளர் அலுவலகம்,
முல்லைத்தீவு.




# அன்னாமுன்னா செய்கை

காற்றில்லாமல் உயிர்களில்லை, கரைகளில்லாமல் நதிகளில்லை, மரங்களில்லாமல் மனிதன் இல்லை

குடும்பம் : Annonaceae
சாதி : AnnonaCorr.Serr
இனம் : AnnonacherimolaMill (சொமோயா)
AnnonamuricataL (முள்அன்னாமுன்னா)
Annonareticulate L (மணல்அன்னாமுன்னா)
AnnonasquamosaL (சீனிஅன்னாமுன்னா)

உலகம் முழுவதும் பிரபல்யமாகவுள்ளஅன்னாமுன்னா தென் அமெரிக்க, ஆபிரிக்காவின் கிழக்கு பகுதியை தாயகமாக கொண்டுள்ளது.

இலங்கையில் வீட்டுத் தோட்டங்களில்முள் அன்னாமுன்னா, சொமோயா, சீனி அன்னாமுன்னா, மணல் அன்னாமுன்னா செய்கைபண்ணப்படுகின்றது. இவை 5- 10 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியது. இதன் மரப்பட்டையானது கபில நிறமானதாகவும் காய்கள் பச்சை நிறமான அழுத்தமற்றதாகவும்காணப்படும். சதைப் பகுதி வெள்ளை நிறமானவையாகவும் விதைகள் கறுப்பு நிறமானவையாகவும் இருக்கும்.

அன்னமுன்னாவை விதைகள், ஒட்டுதல், வோவிட்ட துண்டம் மூலம் இனப்பெருக்கம் செய்யமுடியும். விதையின் முளைதிறன் காலம்குறைவாக காணப்படுவதனால்பழங்களிலிருந்து விதைகளை அகற்றியவுடன் முளைத்தலுக்கு பயன்படுத்துவது மிகவும் பொருத்தமானது. 5மீற்றர் X 5மீற்றர் இடைவெளியில் 160 மரங்களை நடுகை செய்யலாம். புரட்டாதி, ஐப்பசி மாதங்



களில் நடுகை செய்வது உகந்தது.

நடுகை செய்யப்பட்டு மூன்று வருடங்களில் விளைவைப் பெற்றுக் கொள்ளமுடியும். சாதகமான சூழல் காணப்படும் போது வருடம் முழுவதும் பழத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும்.சாதாரணமாக ஒரு மரத்திலிருந்து



10 - 50 பழங்கள் வரை வருடமொன்றிற்கு பெற்றுக் கொள்ளலாம்.

ஐஸ்கிறீம், பழப்பானம் போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை தயாரிப்பதற்கு அன்னாமுன்னா பயன்படுத்தப்படுகிறது.மென்பானமாகவும் பருகக்கூடியதொன்றாகும். அன்னாமுன்னா தாவரப் பகுதிகளான இலை, வேர், தண்டு, காய், விதைகள் என்பனவற்றில் அடங்கியுள்ள இயற்கையான மருத்துவக் குணங்களால் மலச்சிக்கல், மூட்டுவலிகள்,உணவு நஞ்சாதல்,வாந்தி,கண் நோய்கள்,தோல் நோய்கள்,நீரிழிவு,சிறுநீரகம் சார்ந்த நோய்கள், புற்று நோய் என்பவற்றைக் குணப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

அன்னா முன்னா வேர், இலை மற்றும் விதைஎன்பவற்றில் இருந்து பெறப்பட்டசாறுகளை தாவர பீடைவிரட்டிகளாக பயன்படுத்த முடியும்.

பல்வேறு வகையிலும் நன்மை பயக்கும் அன்னாமுன்னாவை நடுகை செய்து ஆரோக்கியமான வாழ்விற்கு வழிவகுப்போம்.

ஆக்கம்: செல்வி குணரத்தினம் அபிராமி
குமுழமுனை விவசாயப் போதனாசிரியர்,
பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்
அலுவலகம்,
முல்லைத்தீவு.

## விக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கல், அதிகாரங்களைப் பகிர்தல் போன்ற விவகாரங்களுக்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவை வெளியிட்டுள்ளன.

நாட்டைப் பிரிக்கவா புதிய அரசமைப்புக்கு ஆதரவாகக் கைகளை உயர்த்தப் போகின்றீர்கள் என எம்மிடம் கேள்வி கேட்ட எமது கிராமத்திலுள்ள மக்கள், இன்று உத்தேச புதிய அரசமைப்பு மிகவும் சிறந்ததொன்று என்கின்றனர்.

ஒருமித்த நாடு என்ற வகையிலும் அதிகாரங்களைப் பகிரவும், பௌத்த மதத்திற்குரிய முன்னுரிமையை அப்படியே பாதுகாக்க ஏனைய கட்சிகளும் தயாராக இருக்கின்றன. அதனால் வடக்கிலுள்ள விக்னேஸ்வரன் போன்ற இனவாதிகளும், தெற்கிலுள்ள வீரவன்ஸ போன்ற இனவாதிகளும் இன்று ஒரு மூலைக்குள் முடங்கியுள்ளனர். இந்த நிலையில் வடக்கிலும், தெற்கிலும் மூலையில் ஒதுங்கியிருக்கும் இனவாதிகளை சேர்த்துக் கட்டி நடுக்கடலில் தள்ளவேண்டும். கடந்த வாரம் நடைபெற்ற நாடாளுமன்ற விவாதத்தின்போது இனவாதிகளுக்குச் சிறந்த பதிலடி வழங்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாட்டுக்குப் பின்னால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகாக்களின் சதி உள்ளது. இதற்குப் பின்னணியில் இருப்பவர்களின் தகவல்களை இன்னும் ஒரு வாரத்தில் அம்பலப்படுத்துவோம்.

இன்னும் இரண்டு மாதங்களில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தலை இலக்குவைத்து, மக்கள் மத்தியில் இந்த அரசைக் கஷ்டத்திற்கு உள்ளாக்கும் சூழ்ச்சி ஒன்று இடம்பெறுகின்றதா என்ற சந்தேகம் எமக்குள் எழுந்துள்ளது. எனவே அது யார் என்பதை விரைவில் வெளிக் கொண்டு வருவோம் – என்றார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைக்கு வரும் எனநீதிச் சேவைகள் ஆணைக்குழு நேற்று அறிவித்தது.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாக உள்ள திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் வவுனியா மாவட்ட நீதிபதியாகவும், வவுனியா மாவட்ட நீதிபதியாகவுள்ள எஸ். லெனின்குமார் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாகவும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதியாக உள்ள ஜே.கஜநிதிபாலன் சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாகவும், கல்முனை மாவட்ட நீதிபதியாக உள்ள வி.இராமகமலன் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதியாகவும்,

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாக உள்ள எம்.எஸ்.எம். சம்சுதின் மூதூர் மாவட்ட நீதிபதியாகவும், மன்னார் மாவட்ட நீதிபதியாக உள்ள ஏ.ஜி.அலெக்ஸ் ராஜா கல்முனை மாவட்ட நீதிபதியாகவும், மட்டக்களப்பு நீதிபதியாக உள்ள எம்.கணேசராசா மன்னார் மாவட்ட நீதிபதியாகவும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

## மாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரது கவனத் தையும் ஈர்த்தது.

இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பான நிலைமை ஏற்பட்டது.

வடமேல் மாகாண சபையின் இந்த மாதத்துக்கான அமர்வு நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்துகொள்வதற்காக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் பிரதான வீதியில் மாட்டு வண்டிலில் பயணம் செய்து, மாகாண சபையை அடைந்தனர்.

எரிபொருள் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு வலியுறுத்தியும், நல்லாட்சி அரசைக் கடுமையாக விமர்சிக்கும் வகையில் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும் உறுப்பினர்கள் மாட்டுவண்டிலில் பயணம் செய்தனர்.

## தமிழ் மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையின் பரிசளிப்பு மற்றும் கௌரவிப்பு நிகழ்வு என்பன நேற்று முன்தினம் திருகோணமலை சென்.மேரிஸ் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் இரா. சம்பந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவேண்டுமானால் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் ஒருமித்துச் செயற்பட வேண்டியது அவசியமானது. இதனை அனைவரும் உணர்ந்து செயற்படவேண்டும்.

கூட்டமைப்புக்குள் பிளவை ஏற்படுத்தி அதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியாத நிலையை உண்டுபண்ணச் சிலர் விரும்புகின்றனர். அது ஏற்புடையதல்ல. நாம் ஒற்றுமையுடன் பயணித்தால் மட்டுமே எமது உரிமைகளை இலகுவாக அடைய முடியும்.

இதனை உணர்ந்து எதிர்காலத்தில் செயற்படவேண்டிய தேவை நம் அனைவருக்கும் உண்டு – என்றார்.

## 12 ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்மொழிவுகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் பீடத் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் உட்பட இலங்கை தமிழரசுக் கட்சி மத்தியகுழு உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தின் பின்பே வடக்கு – கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான வேட்பாளர்களை நியமிக்கும் பணி ஆரம்பமாகும் எனக் கூறப்படுகின்றது.

## கோயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாள அட்டை கேணிக்குள் விழுந்தமையால் அதனை எடுப்பதற்காகக் கேணியில் இறங்கியபோதே மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மாணவனின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## தமிழ் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாமலும் அரசு விரைவாக நடவடிக்கை எடுத்து தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும்.

இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா சபையில் வலியுறுத்தியுள்ளார்.

சட்ட மூலங்களைத் திருத்துவதற்கான இரண்டாம் வாசிப்பு நிலை விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

வடக்கு, கிழக்கில் தங்களது அரசியல் உரிமைகளை வென்றெடுக்கப் போராடிய பல தமிழ் பேசும் இளைஞர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு பிணை வழங்கப்படாமலும், குற்றப்பத்திரிகை பகிரப்படாமலும் வருடக்கணக்கில் சிறைக்கைதிகளாக உள்ளனர்.

விசாரணைகள் இன்னும் முடிவுறவில்லை என்ற காரணத்தால், இன்னுமொரு தொகையினர் சிறையில் வாடுகின்றனர். அவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டுப் பிணை வழங்கப்படாமல் வழக்குகள் தாமதமாக விசாரிக்க எடுக்கப்படும்போது பல வருடங்கள் கடந்துபோகின்றன.

இறுதித்தீர்ப்பு வரும்பொழுது பல வழக்குகளில் அவர்கள் குற்றமற்றவர்கள் என்றும் விடுதலை செய்யப்படுகின்றார்கள். அவ்வாறானவர்கள் வெளிவரும்போது தமது இளமையை இழந்தவர்களாகவும், வாலிபத்தை இழந்தவர்களாகவும் வயோதிபர்களாகவும், நோயாளிகளாகவும் வெளியே வருகின்றார்கள்.

இது மனிதாபிமான அடிப்படையில் பார்க்கும் பொழுது, ஒரு பாவச் செயலாகும். அவர்களை வெளியில் எடுக்க, சம்பந்தப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள், பல இலட்சக்கணக்கான ரூபாவை செலவிடுகின்றனர். குடும்பத்தவர்கள் நீதிமன்றங்களுக்கு ஏறி இறங்கியே காலத்தைக் கழித்துக் கடைசியில் அவர்களும் இறந்துவிடுகிறார்கள்.

கடந்த முப்பதாண்டு காலத்தில் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் நீதி கிடைக்காமலும், உரிமையும் சமத்துவமும் கிடைக்காமலும் மண்ணுடனும், கடலுடனும் சங்கமமாகிவிட்டார்கள். அரசுகள் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

அண்மையில் தமிழ் இளைஞர் ஒருவர் 18 ஆண்டுகள் அநியாயமாக சிறையிலடைக்கப்பட்டு, 18 ஆண்டுகளின் பின் நிரபராதி என்று விடுவிக்கப்பட்டுள்ளார். இவரின் இளமையையும் இழந்த வாழ்வையும் யாரும் மீள்கொடுக்க முடியாது.

இதேபோல், அனுராதபுரம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டவர்களும், தமக்காக நீதிகேட்டு உண்ணாவிரதமிருக்க வேண்டிய நிலைமையே, ஏற்பட்டுள்ளது. சட்டமா அதிபருக்கு வவுனியாவுக்கு வழக்கை மாற்றுகின்ற அதிகாரமிருந்தும், அவர் அதைப்பயன்படுத்தத் தயங்குகின்றார்.

இதற்கு பின்னால் இருக்கும் தடை என்ன? தெற்கைச் சாந்தப்படுத்த வடக்கிலுள்ள வர்களைச் சிறையில் அடைக்கின்றார்கள். குற்றமிழைத்தால், சட்டத்தின் காவலர்களும், சட்டத்தை செயற்படுத்துபவர்களும் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.

# நல்லிணக்க முயற்சிகளுக்கு அமெ.தொடர்ந்தும் ஆதரவு

## அந்நாட்டு அரசியல் உதவிச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.08

தாமதங்களுக்கு மத்தியிலும் முன்னெடுக்கப்படும் இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்காவின் அரசியல் விடயங்களுக்கான உதவி செயலாளர் தோமஸ் சானொன் இந்தக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு மாத்திரமன்றி பிராந்தியத்தின் பாதுகாப்பு விடயத்திலும் இணைந்து செயற்பட அமெரிக்கா தயாராக இருப்பதாகவும் சானொன் குறிப்பிட்டுள்ளார்.

‘‘உலக நாடுகள் இன்று இலங்கையை அவதானித்துக் கொண்டிருக்கின்றன.

“இந்தநிலையில் இலங்கையின் பயணத்துக்கு உதவ அமெரிக்கா தயாராக இருக்கிறது.

“அத்துடன் இலங்கையின் பங்காளராக இருந்து தீர்வு விடயத்தை விரைவுபடுத்த அமெரிக்கா விரும்புகிறது.” – என சொனொன் குறிப்பிட்டுள்ளார். (உ)

# இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட 20 ஆயிரம் தொன் அரிசி விற்பனை

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 20 ஆயிரம் மெற்றிக் தொன் நாட்டரிசி சந்தைக்கு விநியோகிக்கப்படுவதாக வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்பட்ட 136 கோடி ரூபா பெறுமதியான அரிசி தற்சமயம் சதொஸ விற்பனை நிலையங்கள் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம் என்பனவற்றின் ஊடாக சந்தைக்கு விற்பனை செய்யப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

ஒரு கிலோ நாட்டரிசி 74 ரூபாவுக்கும், ஒரு கிலோ சம்பா அரிசி 78 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

டிசெம்பர் பண்டிகைக் காலத்தை கருத்திற்கொண்டு 50 ஆயிரம் மெற்றிக் தொன் நாட்டரிசியும், 30 ஆயிரம் மெற்றிக் தொன் சம்பா அரிசியும் இறக்குமதி செய்யப்படும் . இதனால் சந்தையில் எந்த விதத்திலும் அரிசி தட்டுப்பாடு ஏற்பட மாட்டாது என்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

## அலிக்கான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றார்.

வடக்கு மாகாண சபையின் 109ஆவது அமர்வு நேற்றுச் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது.

அமர்வின் ஆரம்பத்தில், தனது பதவிக்கடிதத்தை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானத்திடம் கையளித்து தமது கன்னி உரையை அலிக்கான் ஷெரீப் நிகழ்த்தினார்.

அவையின் புதிய உறுப்பினரை அமைச்சர்களும், சக உறுப்பினர்களும் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

வடக்கு மாகாண சபையில் அங்கம் வகித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் றிப்கான் பதியுதீன் அண்மையில் பதவி விலகினார். அதனைத் தொடர்ந்து, தேர்தல்கள் செயலகத்தால் அலிக்கான் ஷெரீப் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## தொடர்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் பலவும் சேதமாகியுள்ளன. கொட்டித் தீர்க்கும் மழையினால் மக்களும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக யாழ்.மாவட்டத்தில் 622 குடும்பங்களைச் சேர்ந்த 2,107 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட மேலதிக செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் பெய்து வரும் மழை தொடர்பான விடயங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தாழ் நிலப்பரப்பில் வாழும் குடும்பங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன. உடுவில், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 17 குடும்பங்களைச் சேர்ந்த 67 பேர் மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இடைத்தாங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவையாழ். மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் மற்றும் யாழ். மாவட்ட செயலகம் ஆகியன வழங்கி வருகின்றன – என்றார்.

மழை தொடர்ந்து பெய்து வருவதால் நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அவை அழுகி அழியும் கட்டத்தில் உள்ளன. மரக்கறிப் பயிர்களும் வெள்ளம் தேங்கி அழுகியுள்ளன. இதனால் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

## முள்ளிவாய்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளன.

முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் பாக்கியநாதன் மரியமலர் என்பவரின் காணியிலேயே அவை மீட்கப்பட்டுள்ளன.

அவர் வசிக்கும் வீட்டுக்கு முன்னால் கொட்டில் ஒன்றை அமைப்பதற்காக நிலத்தைத் தோண்டியபோது மிதிவெடிகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்தத் தகவல் இராணுவத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அந்தப் பகுதிக்குச் சென்ற முல்லைத்தீவு விசேட அதிரடிப் படையினர் அங்கு 50 மிதிவெடிகளை மீட்டுச் செயலிழக்கச் செய்தனர்.

# இலங்கையின் கடப்பாடுகளை நிறைவேற்ற அமெரிக்கா உதவும்!






கொழும்பு, நவ.08

நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் உள்ளிட்ட கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இலங்கைக்கு ஆதரவளிப்போம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் தோமஸ் சானொனும், இலங்கை வெளிவிவகாரச் செயலர் பிரசாத் காரியவசமும், இணைந்து நேற்று முன்தினம் இரவு வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

ஜனநாயகம், சட்ட ஆட்சி மற்றும் எமது நாட்டு மக்களின் வாய்ப்புவளம் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றுக்கான உறுதிப்பாட்டினை பகிரும் வகையில், இலங்கை மற்றும் அமெரிக்கா ஆகியன 2017 நவம்பர் மாதம் 6 ஆம் நாள் கொழும்பில் இரண்டாவது பங்காளித்துவ உரையாடலை நடத்தியிருந்தன.

இந்தச் சந்திப்பானது, வெளி விவகார அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் மற்றும் அரசியல் விவகாரங்களுக்கான அமெரிக்க உதவிச் செயலர் தோமஸ் சானொன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டு பேச்சுவார்த்தையில் அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகியவற்றுக்கு இடையிலான ஒத்துழைப்பு வலியுறுத்தப்பட்டதுடன், வழக்கமான மறறும் கட்டமைக்கப்பட்ட சுதந்திர மற்றும் திறந்த இந்தோ-பசுபிக் பிராந்தியம், உலகம் முழுவதும் சமாதானம் மற்றும் நிலை பேற்றுநிலை நோக்கி கூட்டாக பணியாற்றுவது என இரு நாட்டு அரசுகளும் தீர்மானித்துள்ளன.

அனைத்து நாடுகளும் சர்வதேச சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் அனுபவிப்பதை உறுதிப்படுத்தக் கூடிய விதிமுறைகள் அடிப்படையிலான ஆணை, ஊக்குவிப்பு ஊடாக இந்தியப் பெருங்கடலின் பாதுகாப்பு, நிலைபேற்று நிலை மற்றும் வாய்ப்புவளம் பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதை அமெரிக்காவும் , இலங்கையும் ஏற்றுக்கொண்டிருந்தன.

பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியில் சமாதானம் மற்றும் நிலைபேற்று நிலைக்கான தொலைநோக்கினை மேம்படுத்துவதற்கு இரு நாடுகளும் ஒப்புக்கொண்டதுடன், கடல்பயண மற்றும் வான் பயண சுதந்திரம் மற்றும் தடை யற்ற வர்த்தகம் உள்ளடங்கலாக சட்ட விதியின் அடிப்படையிலமைந்த கடற்படை ஆணையை பராமரிப்பதன் முக்கியத்துவத் தையும் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், கடற்கொள்ளை எதிர்ப்பு அளவுகோல்கள் உள்ளடங்கலாக, சமுத்திர பாதுகாப்பைப் பகிர்ந்து கொள்ளல் மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கான விருப்பையும் அவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

தீவுத்தேசம் என்ற வகையில், அதன் சொந்த எல்லைகள் மற்றும் கடல் வளங்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளை செயற்தகு முறையில் முன்னெடுக்கக் கூடிய வகையில் கடல்சார்ந்த கொள்திறனை கட்டியெழுப்புவதற்கான தேவையை இலங்கை வலியுறுத்தியுள்ளது.

பிராந்திய வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக விளங்கும் சுதந்திரமான மற்றும் திறந்த சமுத்திரம் ஊடாக ஆசியா, இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆபிரிக்கா நாடுகள் மத்தியில் வர்த்தகப் பாய்ச்சலை இணைக்கின்ற ஆசியாவில், வர்த்தகம் மற்றும் முதலீடுகளுக்கான பிராந்திய மையமாக இலங்கையை அபிவிருத்தி செய்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

வர்த்தகம் , முதலீடு, வெளிநாட்டு உதவிகள் மற்றும் நாடு முழுவதும் உள்ள பங்குதாரர்களுடனான நேரடியான பங்காளித்துவம் ஊடாக இலங்கைக்கு தமது ஆதரவை வழங்கவுள்ளதையும் அமெரிக்கா வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையுடன் வலுவான பொருளாதார பங்காளித்துவத்தையும், உறுதியான வர்த்தக உறவையும் அமெரிக்கா கொண்டுள்ளது. 2016 பெப்ரவரி மாதம் ஆரம்ப பங்காளித்துவ உரையாடல்கள் நடைபெற்றது முதல் இலங்கை மற்றும் அமெரிக்க இருதரப்பு உறவுகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இதில் சட்டத்தை நடைமுறைப்படுத்தல், போதைவஸ்து எதிர்ப்பு, பயங்கரவாத எதிர்ப்பு சட்டவிதி மற்றும் வெளிப்படைத் தன்மையை வலுப்படுத்துவதற்காக நிதி மற்றும் கடன்சவால்களை அடையாளப்படுத்த உதவுவதற்காக திறை சேரி மற்றும் நீதித்திட்டங்களுக்கான அமெரிக்கத் திணைக்களங்களை நிறுவுதல் ஆகிய வற்றுக்கான ஒத்துழைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் உயர்மட்ட பிரதிநிதிகளின் இலங்கைப் பயணம் மற்றும் ஜனாதிபதி மைத்திரி, நாடாளுமன்ற சபாநாயகர் மற்றும் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் ஆகியோரின் அமெரிக்கப் பயணங்கள் ஆகிய ஒரு சில முக்கியமான அதிகாரபூர்வ பயணங்களும் இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் வலுவான இருதரப்பு உறவுகளின் அடையாளமாக, அமெரிக்க காங்கிரஸின் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்ததும் இலங்கைக் கடற்படைக்கு இரண்டாவது கடலோர பாதுகாப்பு கப்பலை வழங்கவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்த செயலாளர் வகுப்பு உயர் தரமிக்க கப்பலானது, இலங்கையை அதன் கடலோரங்கள் மற்றும் தனிப்பட்ட பொருளாதார வலயத்தை திறம்பட காவல் செய்யவும், அதன் வர்த்தக மற்றும் தொடர் பாடலின் சமுத்திர எல்லையை பாதுகாக்கவும் வழிவகுக்கும்.

மேலும், அமெரிக்காவானது, இலங்கையின் ஆங்கில வகுப்புகளுக்கு அமெரிக்க அமைதிப் படை தொண்டர்களை மீள அனுப்புவதற்காக இலங்கை அரசுடன் இணைந்து பணியாற்றவுள்ளது.

உற்பத்தித் திறன், பாலின் தரம், நிதி, உணவுப் பாதுகாப்பு மற்றும் வர்த்தகம் ஆகியவற்றை மேம்படுத்தி, இலங்கையின் பால் துறையை வலுப்படுத்தி நவீனமயப்படுத்துவதற்காக, விவசாய உணவுக்கான அமெரிக்க திணைக்களத்தின் முன்னேற்ற திட்டத்தால் வழங்கப்பட்டுள்ள 21 மில்லியன் அமெரிக்க டொலர் திட்டம் குறித்தும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

மில்லேனிய சவால் நிறுவன ஒப்பந்தத்தின் அபிவிருத்திப் பணிகள் 2017-2018 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இலங்கைக் கடற்படையின் மரைன் படைப் பிரிவை நிறுவ உதவுதல், இராணுவ நிபுணத்துவ கல்வியைப் பெறுவதற்கு இலங்கைப் படையினரை அமெரிக்காவுக்கு அனுப்புதல், இருதரப்பு பயிற்சிகள் மற்றும் கப்பல் பயணங்கள் மற்றும் இரு நாடுகளிலுமுள்ள மிகச் சிறந்த இராணுவ அதிகாரிகளுக்கிடையிலான இருதரப்பு மற்றும் பிராந்திய மூலோபாய நலன்களுக்காக இராணுவ ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு இருநாடுகளுமே ஒப்புக்கொண்டுள்ளன.

நீடித்த சமாதானத்தை அடைந்து கொள்வதற்கானநல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை ஊக்குவிக்கும் இலங்கையின் உறுதிப்பாட்டை மீள் உறுதி செய்து, 2017 மார்ச் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அதன் இணை அனுசரணையை இலங்கையும் அமெரிக்காவும் நினைவுபடுத்தியது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஒப்புக்கொண்ட உண்மையைக் கண்டறிதல், நீதி, இழப்பீடுகள் மற்றும் மீள நிகழாமைக்கான உத்தரவாதங்கள், காணாமற்போனோரின் குடும்பங்களுக்கு பதிலளித்தல் மற்றும் பாதுகாப்பு நிறுவனங்களின் நிபுணத்துவத்தை மேம்படுத் துவதற்கு பொருத்தமான சீர்திருத்தங்களை செயல்படுத்தல் ஆகிய உறுதிப்பாடுகளை செயற்படுத்துவதற்கு தமது ஆதரவினை இலங்கைக்கு வழங்கவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

நல்லிணக்க நடவடிக்கைகளுக்கான ஆதரவு ஊடாக இலங்கை மக்களின் விருப்பைப் பிரதிபலிக்கும் இந்த உறுதிப்பாடுகளை செயற்படுத்துவதில் இலங்கை அரசை யுஎஸ்எய்ட் வழிநடத்தவுள்ளது.

ஜனநாயகம், ஜனநாயக நிறுவனங்கள் மற்றும் நடை முறைகள், நல்லாட்சி, சட்ட விதிமுறை, நீதி, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் நாடாளுமன்ற நடைமுறைகள் ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கான இலங்கை அரசின் உறுதியளிப்பு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரசமைப்பு சீர்திருத்தம், பாதுகாப்பு படையினர் வசமுள்ள தனியார் காணிகளை விடுவித்தல், காணாமற் போனோருக்கான சுயாதீன மற்றும் நிலையான பணிய கத்தைஅமைத்தல் ஆகிய விடயங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்கம் , சட்ட ஆட்சி மற்றும் நீதித்துறை சீர்திருத்த முயற்சிகளுக்கிணையாக, இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பும் தொடரவுள்ளன.

இதில் கண்ணிவெடிகளை அகற்றுதல், இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சி, கப்பல்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளின் வருகை ஆகிய அமெரிக்காவின் உதவிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உலகளாவிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். குழுக்கள் தொடர்பான தமது கரிசனையை இலங்கையும், அமெரிக்காவும் பகிர்ந்து கொண்டுள்ளன.

வட கொரியாவின் சட்ட விரோதமான அணுசக்தி மற்றும் ஏவுகணைத்திட்டங்களால் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் குறித்தும், வடகொரியா மீது அனைத்து ஐ.நா. உறுப்பினர்களும் அழுத் தம் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும், இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தீர்மானங்களின் முழுமையான செயல்முறைப்படுத்தல் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

2017 ஒகஸ்ட் முதல் செப்ரெம்பர் மாதம் வரை இலங்கையில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்து சமுத்திர பிராந்திய மாநாடு குறித்து இருநாடுகளுமே தங்களது திருப்தியை வெளிப்படுத்தியதுடன், இந்திய-பசுபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பு, நிலைபேற்றுநிலை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொருளாதார வாய்ப்பை மேம்படுத்தக் கூடிய கூட்டு திட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்பதற்கும் இணங்கியுள்ளன.

அமெரிக்காவும், இலங்கையும் தமது இருதரப்பு உறவுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன், பரஸ்பர நலன்களுக்காக அமெரிக்கா - இலங்கை பங்காளித்துவத்தை வலுப்படுத்துவதற்கான தமது உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளன.

1948 ஆம் ஆண்டு சுதந்தி ரத்தைத் தொடர்ந்து இலங்கையை அங்கீகரித்த முதன்மையான ஒருசில நாடுகளில் அமெரிக்காவும் ஒன்றாகும்.

2018 ஆம் ஆண்டு இலங்கை - அமெரிக்காவுக்கிடையிலான இராஜதந்திர-உறவுகளின் 70 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு தமது ஈடுபாடு மற்றும் பரஸ்பர ஆதரவை நோக்கிப் பணியாற்றுவதற்கான அர்ப்பணிப்பை இரு நாடுகளும் கொண்டுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# வடக்கு அதிகாரி வெளிநாட்டில் கல்வி கற்க மாகாண ஆளுநர் அனுமதி வழங்கவேண்டும்

## உறுதிகேள் எழுத்தாணை மனு மீது யாழ்.மேல் நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், நவ.8

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் மரியதாசன் ஜெகூ, வெளிநாட்டுக்குச் சென்று கல்வியைத் தொடர வடக்கு மாகாண ஆளுநர் அனுமதி வழங்கவேண்டும் என யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

உதவிச் செயலாளர் தாக்கல் செய்த உறுதிகேள் எழுத்தாணை மனுமீதே மேல் நீதிமன்ற நீதிபதி இந்தக் கட்டளையைப் பிறப்பித்தார்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் மரியதாசன் ஜெகூ, கல்விப் புலமைப் பரிசில் பெற்று ஆஸ்திரேலியாவுக்கு கற்கச் சென்றிருந்தார்.

அவர் கடமையிலிருக்கும்போது வெளிநாடு செல்வதற்கான அனுமதி கேட்டு மாகாண ஆளுநருக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஊடாக விண்ணப்பிருந்தார்.

அவரது விண்ணப்பத்துக்கு வடக்கு மாகாணப் பிரதம செயலாளரால் பரிந்துரை வழங்கப்பட்டு அது ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

எனினும் ஜெகூ ஆளுநரின் அனுமதி கிடைக்க முன்னரே ஆஸ்திரேலியா சென்றுவிட்டார்.

இதன் பின்னர் வடக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய அவர் மீள அழைக்கப்பட்டார்.

நாடு திரும்பிய அவருக்கு அனுமதியின்றி வெளிநாடு சென்ற காரணத்தால் வடக்கு மாகாண ஆளுநரால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆளுநரின் இந்த நடவடிக்கைக்கு எதிராகவும் தனது வெளிநாடு செல்லும் விடுமுறைக்கான விண்ணப்பத்துக்கு அனுமதி வழங்க கட்டளையிடுமாறு கோரியும் உதவிச் செயலாளர் ஜெகூ யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் எழுத்தாணை மனுவைத் தாக்கல் செய்தார்.

மனு மீதான விசாரணைகள் இடம்பெற்றுவந்த நிலையில் நேற்று யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் கட்டளை வழங்கினார்.

வடக்கு மாகாண ஆளுநரால் மனுதாரான ஜெகூவுக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் ஆளுநரால் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட பிரதம செயலாளர் மனுதாரரின் விண்ணப்பத்தை ஏற்று அனுமதியளித்தே ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

எனவே மனுதாரர் வெளிநாடு சென்றமையில் நிர்வாக மீறல் கிடையாது.

வடக்கு மாகாண ஆளுநர் மத்திய அரசால் நியமிக்கப்பட்டவர். எனினும் அவர் ஆற்றுகின்ற பணிகள் மாகாண அதிகாரத்துக்குட்பட்டவை. எனவே ஆளுநருக்கு உத்தரவிடும் அதிகாரம் மாகாண மேல்நீதிமன்றுக்கு உள்ளது.

அதனடிப்படையில் மனுதாரர் வெளிநாட்டில் கல்வியைத் தொடர்வதற்கான அனுமதியை வழங்க மன்று கட்டளையிடுகிறது.

இந்தக் கட்டளையின் பிரதி ஆஸ்திரேலியத் தூதரகத்துக்கும் அனுப்பிவைக்கப்படவேண்டும் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

## ஜோஸப் எம்.பி. படுகொலை; இறுதி விசாரணை ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, நவ.8


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோஸப் பரராஜசிங்கம் கொலை தொடர்பில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட ஐந்து பேருக்கு எதிரான இறுதிக்கட்ட விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுச் செவ்வாய்க்கிழமை இரண்டாவது நாளாக மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போது வழக்கை எதிர்வரும் ஜனவரி மாதத்துக்கு ஒத்திவைத்து மேல் நீதிமன்றில் நீதிபதி இஸ்ஸதீன் உத்தரவிட்டார்.

இதனடிப்படையில் சாட்சியங்களைப் பதிவுசெய்து, எதிர்வரும் ஜனவரி மாதம் 3, 4, 8, 9ஆகிய தினங்களில் மட்டக்களப்பு மேல்நீதிமன்றில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது சந்தேக நபர்களையும் நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் உத்தரவிடப்பட்டது.

2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி நத்தார் நள்ளிரவு ஆராதனையின்போது மட்டக்களப்பு புனிதமரியாள் தேவாலயத்துக்குள் வைத்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோஸப் பரராஜசிங்கம் அடையாளம் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தப் படுகொலை தொடர்பில் பிள்ளையான் உள்ளிட்ட 7 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அதில் ஒருவர் உயிரிழந்துவிட்டார். ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, மற்றொருவரைப் பொலிஸார் தேடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




## ஸ்கந்தபுரம் காணி விடயம்; பதிலளிக்கவேண்டும் விக்கி

கிளிநொச்சி – ஸ்கந்தபுரம் கிராமத்தில் உள்ள 200 ஏக்கர் கரும்புத்தோட்டக்காணி தொடர்பான விவரங்களுக்குப் பதிலளிக்குமாறு கோரி, வடக்கு மாகாண அவைத் தலைவர் ஊடாக முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்குக் கடிதம் அனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 109ஆவது அமர்வு அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டக் காணியை முன்னாள் போராளிகளுக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வழங்குமாறு உறுப்பினர்கள் கோரியபோதும், அவர்களுக்கு மாற்றுக்காணியை வழங்குவதாக முதலமைச்சர் குறிப்பிட்டார்.

எனினும், குறித்த காணியில் பெண்ணொருவர் மாடு வளர்த்துவருவதாக மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.

அத்தோடு, முதலமைச்சர் தன் முடிவை மாற்றி, குறித்த காணிகளை முன்னாள் போராளிகளுக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வழங்க முன்வரவேண்டுமென உறுப்பினர் த.குருகுலராசா குறிப்பிட்டார்.

இந்நிலையில், இந்தக் காணியின் பங்குதாரர்கள் யார்? செலுத்தப்பட்ட முதல் எவ்வளவு? நோக்கு இலக்கு மாற்றப்பட்டது எப்படி? இனிமேல் ஒதுக்கப்படும் முதல் எவ்வளவு? வேறு யாருக்காவது குத்தகைக்கு காணி வழங்கப்பட்டதா என்ற கேள்விகளுக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதிலளிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டு, அவைத் தலைவர் ஊடாக மேற்படி கேள்விகள் அடங்கிய கடிதம் முதலமைச்சருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

## எரிபொருள் நெருக்கடி தீருமாம்

நாற்பதாயிரம் மெட்ரிக் தொன் எரிபொருளை ஏற்றிய லேடி நெவரஸ்கா கப்பல் இன்று இரவு 11.00 மணிக்கு கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கப்பல் வந்தடைந்ததும் நாட்டில் ஏற்பட்டுள்ள பெற்றோல் நெருக்கடியை முற்றாக இல்லாமலாக்க முடியும் என அரசு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

## பெற்றோல் நெருக்கடி; ஆராய்வதற்கு உபகுழு

நாட்டில் ஏற்பட்டுள்ள பெற்றோல் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அமைச்சரவை உபகுழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

பாட்டலி சம்பிக்க ரணவக்க, சரத் அமுனுகம மற்றும் அநுர பிரியதர்சன யாப்பா ஆகிய மூன்று அமைச்சர்களைக்கொண்ட இந்தக் குழு, எரிபொருள் பிரச்சினை குறித்து ஆராய்ந்து ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

அத்தோடு, திடீரென ஏற்பட்டுள்ள இந்தச் சிக்கல் நிலை குறித்து பெற்றோலிய வளத்துறை அமைச்சர் விளக்கமளிக்க வேண்டுமென பிரதமர் ரணிலும் கோரியுள்ளார்.

இலங்கைக்கு கடந்த வாரம் வந்த இந்தியன் ஒயில் நிறுவனத்தின் எரிபொருள் கப்பல் பெற்றோலிய வளத்துறை அமைச்சினால் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படப்போவதாகக் குறுந்தகவல் மூலம் செய்தி பரப்பப்பட்டது.

தரம் குறைந்த எரிபொருள் என்பதாலேயே குறித்த கப்பல் நிராகரிக்கப்பட்டதென அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கூறியிருந்தார்.

இதனையடுத்து, எரிபொருளைப்பெற்றுக்கொள்ளக் கடந்த ஐந்து தினங்களாக மக்கள் இரவுபகலாக நீண்ட வரிசையில் காத்திருப்பதோடு, மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதுடன் அரசும் நெருக்கடி நிலைக்கு முகம் கொடுத்துள்ளது.

நாளை வியாழக்கிழமை பயன்படுத்துவதற்குத் தேவையான அளவு எரிபொருள் கைவசம் உள்ளதாகப் பெற்றோலிய வளத்துறை அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சைட்டம் எதிர்ப்பு அணியினர் நாளை பெரும் போராட்டம்




கொழும்பு, நவ.8

சைட்டம் எதிர்ப்பு அணியினர் நாளை வியாழக்கிழமை கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளனர் என அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சங்க ஏற்பாட்டாளர் லஹிரு வீரசேகர தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

சைட்டம் நிறுவனத்துக்கு எதிராகப் பெற்றோர் ஆரம்பித்துள்ள சாகும் வரை உண்ணாவிரதத்தை அரசு பொருட்படுத்தாது செயற்படுவதாகவும், அரசின் இந்த நிலைப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## எம்.பியாகிறார் பியசேன கமகே



கொழும்பு, நவ.8

கீதா குமாரசிங்கவுக்குப் பதிலாக நாடாளுமன்றுக்கு தெரிவாகியுள்ள பியசேன கமகேவின் பெயர் இன்று வர்த்தமானியில் அறிவிக்கப்படும் எனத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் காலி மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டிய கீதா குமாரசிங்க இரட்டைக் குடியுரிமை கொண்டவர் எனத் தெரியவந்தமையைத் தொடர்ந்து அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது.

உயர் நீதிமன்றம் அண்மையில் இந்தத் தீர்ப்பை அறிவித்திருந்தது. காலி மாவட்டத்தின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்றச் செயலாளர் நாயகம், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்தார்.

இதன்படி காலி மாவட்டத்தில் கட்சியின் சார்பில் போட்டியிட்டு விருப்பு வாக்குப் பட்டியலில் அடுத்த நிலையில் இருந்த பியசேன கமகேவின் பெயர், நாடாளுமன்றம் செல்ல பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. காலி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி பியசேன கமகேவின் பெயரை நேற்றுத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளார். இதன்படி இன்று வர்த்தமானியில் பியசேன கமகேவின் பெயர் பிரசுரிக்கப்படவுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.11.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.